**பது.நக.எண்.டி1/088/2021**

**தீர்மானஎண்.820/2021** **நாள்:03-11-2021**

# தானப்பத்திரம்

மண்டலம்-6, கோட்டம்-73ல் திருமதி. S. Dhanalakshmi அவர்கள் பழைய கதவு எண்.108, புதிய கதவு எண்.256, ஸ்டராஹன்ஸ் ரோடு, ஓட்டேரி, சென்னை - 600012 Old S.No.2647, As per patta R.S.No.2829, Block No.42, புரசைவாக்கம் கிராமம் என்ற இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-06ல் PPA/WDCN06/04909/2021 நாள்.30.06.2021ன்படி விண்ணப்பித்துள்ளார். அவர்கள் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக ஸ்டராஹன்ஸ் ரோடு அமைய பெற்றுள்ளது. இரண்டாம் முழுமைத் திட்டத்தின்படி ஸ்டராஹன்ஸ் ரோடு 24.00 மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி, சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய 16.52 ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கபடவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே,

(1) மனை உரிமையாளர் திருமதி. S. Dhanalakshmi அவர்கள் பழைய கதவு எண்.108, புதிய கதவு எண்.256, ஸ்டராஹன்ஸ் ரோடு, ஓட்டேரி, சென்னை – 600012, Old S.No.2647, As per patta R.S.No.2829, Block No.42, புரசைவாக்கம் கிராமம் என்ற இடத்தில் அமைந்துள்ள மனையில் சாலை விரிவாக்கம் செய்ய 16.52ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் பெற்றுக் கொள்ளவும்,

(2) தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் தொகை ரூ.33,600/- ஐ (ரூபாய் முப்பத்தி மூன்றாயிரத்து அறுநூறு மட்டும்) மனை உரிமையாளர் திருமதி. D. Dhanalakshmi அவர்களிடம் இருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி என்கின்ற பெயரில் வரைவு காசோலையாக பெறவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர்/ஆணையரது 30.10.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“தானப்பத்திரம் 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

* * * * * *

**ப.து.ந.க.எண்.D1/SD/WDCN15/0418/2021**

**தீர்மானஎண்.821/2021** **நாள்:03-11-2021**

# தானப்பத்திரம்

மண்டலம்-15, கோட்டம்-196ல் Thiru. S.R. Asaithambi அவர்கள் Springdale Road, S.No.1/13, As per Patta S.No.1/13C of Injambakkam villageல் அமைந்துள்ள நிலத்திற்கு குடியிருப்பிற்கான மனைஉட்பிரிவு அனுமதி வேண்டி D1/SD/WDCN15/00418/2021 நாள்:02.08.2021ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை G.O.Ms.No.181 வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை, நாள்.09.12.2020 -ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலை, திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலம் மற்றும் பொது பயன்பாட்டிற்கென ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப் பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

விண்ணபதாரர் சமர்ப்பித்த வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை (1) Thiru. R. Veeramani (2) Thiru. S.R. Asaithambi (3) Thiru. R. Sekar and (4) S.R. Kumar ஆகியோருக்கு சொந்தமானது. (1) Thiru. R. Veeramani (2) Thiru. S.R. Asaithambi (3) Thiru. R. Sekar and (4) S.R. Kumar ஆகியோர் சாலைக்கென ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்கள்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது:

(அ) Thiru. S.R. Asaithambi அவர்கள் மனைஉட்பிரிவு அனுமதி வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி மொத்த பரப்பளவு 3,615.00 ச.மீ ஆகும். இம்மனையில் சாலைக்காக ஒதுக்கப்பட்ட நிலத்தின் பரப்பளவு 1,743.00 ச.மீ ஆகும்.

(ஆ) (1) Thiru. R. Veeramani (2) Thiru. S.R. Asaithambi (3) Thiru. R. Sekar and (4) S.R. Kumar ஆகியோர் சாலைக்கென காட்டப்பட்டுள்ள நிலங்களுக்கு உரிமையுள்ளவராக அறியப்படுகிறார். மனை உரிமையாளர்கள் பட்டாவினை, வட்டாட்சியர், சோழிங்கநல்லூர் வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்கள் ஆதலால் சாலை பகுதியினை மட்டும் மேற்கண்ட 4 நபர்களிடம் இருந்து தானமாக பெற்றுக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

(இ) விண்ணப்பதாரர் Thiru. S.R. Asaithambi சமர்ப்பித்த வரைபடம் Tamil Nadu Combined Development & Building Rules, 2019 க்கு ஏற்ப உள்ளது. மனைஉட்பிரிவிற்கு அணுகு சாலையாக 9.00 மீட்டர் அகலம் உள்ள Springdale Road சாலை அமைந்துள்ளது.

(ஈ) மனை உட்பிரிவின் பரப்பளவு 3,000 ச.மீ க்குள் இருப்பதால் விண்ணப்பதாரர் திறந்தவெளி ஒதுக்கீடு நிலமாக அளிக்க வேண்டிய நிலை ஏழவில்லை.

(உ) மனைஉட்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலையினை அமைப்பதற்கு தேவையான தோராய அபிவிருத்தி கட்டணமாக விண்ணப்பதாரரிடம் இருந்து கட்டணம் வசூலிக்க வேண்டும். மனைஉட்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலையினை அபிவிருத்தி செய்ய தேவையான தொகை ரூ.22,20,000/- வசூலிக்கப்பட வேண்டும்.

மனைப்பிரிவு வரைபடம் விதிமுறைக்கு உட்பட்டு உள்ளதாலும், (1) Thiru. R. Veeramani (2) Thiru. S.R. Asaithambi (3) Thiru. R. Sekar and (4) S.R. Kumar சாலைக்கென காட்டப்பட்டுள்ள நிலத்திற்கு உரிமை உள்ளவராக கருதுவதாலும் சாலைக்கென மொத்தம் 1,743.00 ச.மீ பரப்பளவு நிலத்தினை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

எனவே,

(1) Springdale Road, S.No.1/13, As per Patta S.No.1/13C of Injambakkam village ல் அமைந்துள்ள நிலத்திற்கு மனைஉட்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்கென ஒதுக்கப்பட்ட S.No.1/13A Injambakkam village ல் அமைந்துள்ள 1,743.00 ச.மீ பரப்பளவு நிலத்தினை (1) Thiru. R. Veeramani (2) Thiru. S.R. Asaithambi (3) Thiru. R. Sekar and (4) S.R. Kumar அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கும்,

(2) சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தில் சாலை மற்றும் தெரு விளக்குகள் அமைக்க செலவின தொகை ரூ.22,20,000/- (ரூபாய் இருபத்தி இரண்டு லட்சத்து இருபதாயிரம் மட்டும்) விண்ணப்பதாரரிடம் இருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி" என்ற பெயரில் வரைவு காசோலையாக வசூலிக்கவும்,

மேற்கண்ட *1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர்/ஆணையரது 25.10.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"தானப்பத்திரம் *1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

* * * * * *

சுது.நக.எண். NUHM/B2/3022/2021

**தீர்மான எண். 822/2021** **நாள்:03-11-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - மண்டலம் 1 முதல் 15 வரையில் 140 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள்- 16 நகர்ப்புற சமுதாய நல மையங்கள் மற்றும் 3 மகப்பேறு மருத்துவமனைகளில் துப்புரவு பணி மேற்கொள்ள தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தில் ஒப்பளிக்கப்பட்ட 296 துப்புரவு பணியாளர்களையும், மண்டல அலுவலர் மூலம் அந்தந்த மண்டலத்திலேயே தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் குழுக்கள் (NULM) மூலம் 01.11.2020 முதல் 31.10.2021 வரை ஒரு வருட காலத்திற்கு துப்புரவு பணிகள் மேற்கொள்ள ஆணை வழங்கப்பட்டது - தற்போது 2021-22 நிதியாண்டில் ஒப்பளிக்கப்பட்ட 23 துப்புரவு பணியாளர்கள் சேர்த்து மொத்தம் 319 பணியாளர்களையும் 01.11.2021 முதல் 31.10.2022 வரை ஓராண்டு காலத்திற்கு தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் குழுக்கள் (NULM) மூலம் ஒரு வருட காலத்திற்கு துப்புரவு பணிகள் மேற்கொள்ள அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறையில் தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தின் கீழ் பல்வேறு மருத்துவசார் பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றனர்.

2020-21 ஆம் நிதியாண்டில், தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தில் 296 துப்புரவு பணியாளர்கள் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் சமுதாய நல மையங்களுக்கு பணியமர்த்த அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. இதில், ஒரு பணியாளருக்கு மாத ஊதியம் ரூ.5,775/- மற்றும் 5% வருடாந்திர ஊதிய உயர்வு ரூ.289/- மொத்தம் ரூ.6,064/- என கணக்கிடப்பட்டு பணியமர்த்த அனுமதி அளிக்கப்பட்டிருந்தது.

**அட்டவணை எண்.1**

| வஎண் | பணியமர்த்தப்பட வேண்டிய இடம் | ஒப்பளிக்கப்பட்ட துப்புரவு பணியாளர்கள் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 140 நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்கள் | 280 | ஒரு சுகாதார மையத்திற்கு இரண்டு பணியாளர்கள் |
| 2 | 16 நகர்ப்புற சமுதாய நல மையங்கள் | 16 | ஒரு சமுதாய நல மையத்திற்கு ஒரு பணியாளர் |
| | மொத்தம் | 296 | |

சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண்.862/2020 நாள்.28.10.2020ன்படி, மேற்கண்ட 296 துப்புரவு பணியாளர்களும் கீழ்க்கண்ட அட்டவணையில் தெரிவித்துள்ளவாறு, 1 முதல் 15 மண்டலங்களிலும் மண்டல அலுவலர் மூலம் அந்தந்த மண்டலத்திலேயே, தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்க குழுக்கள்(NULM) மூலம், 01.11.2021 முதல் 31.10.2021 வரை ஓராண்டு காலத்திற்கு துப்புரவு பணிகள் மேற்கொள்ள ஆணை பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**அட்டவணை எண்.2**

| வஎண் | பணியமர்த்தப்பட வேண்டிய இடம் | பணியமர்த்தப்பட்டுள்ள துப்புரவு பணியாளர்கள் | மொத்தம் பணியமர்த்தப்பட்டுள்ள துப்புரவு பணியாளர்கள் |
|---|---|---|---|
| 1 | 140 - நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்கள் | ஒரு சுகாதார மையத்திற்கு ஒரு பணியாளர் | 140 |
| 2 | 16-நகர்ப்புற சமுதாய நல மையங்கள் | ஒரு சமுதாய நல மையத்திற்கு 9 பணியாளர்கள் | 144 |
| 3 | 3-மகப்பேறு மருத்துவமனைகள் | ஒரு மகப்பேறு மருத்துவமனைக்கு 4 பணியாளர்கள் | 12 |
| | மொத்தம் | | 296 |

**சுது.நக.எண். NUHM/B2/3022/2021**

மேற்கண்ட பணியாளர்களுக்கு, 2020-2021 ஆம் நிதியாண்டில், சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையில் துப்புரவு பணியாளர்களுக்கு தினக்கூலியாக ஒரு நாளைக்கு ரூ.391/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதின் அடிப்படையில், ஒரு பணியாளருக்கு மாத ஊதியமாக ரூ.10,170/ ஆக நிர்ணயம் செய்து வழங்கப்பட்டு வருகின்றது. இதில் தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில் அளிக்கப்பட்டுள்ள தொகையினை விட கூடுதலாக ஏற்படும் நிதியினை மாநகராட்சி நிதியில் மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது.

தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில் 2021-22 ஆம் நிதியாண்டில் 296 துப்புரவு பணியாளர்கள் மற்றும் புளியந்தோப்பு, பாடி, போரூர், அடையார், பெருங்குடி ஆகிய நகர்ப்புற சமுதாய நல மையங்களுக்கு புதியதாக 23 துப்புரவு பணியாளர்கள், மொத்தம் 319 துப்புர பணியாளர்கள் பணியமர்த்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்த பணியாளர்களுக்கு ஒரு மாதத்திற்கு ஊதியம் ரூ.7283.43 என கணக்கிடப்பட்டு ஒரு வருட காலத்திற்கு ரூ.2,78,81,000/ (ரூபாய் இரண்டு கோடியே எழுபத்தி எட்டு லட்சத்து எண்பத்தி ஓராயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை எண்.3**

| Greater Chennai Corporation - 140 UPHC list | | | | |
|---|---|---|---|---|
| S.No | Zone | Div.No | Name of the UPHC | No of Sanitary Worker to be posted |
| 1 | 1 | 2 | Kathivakkam UPHC | 1 |
| 2 | 1 | 4 | Ernavoor UPHC | 1 |
| 3 | 1 | 6 | Kuppam UPHC | 1 |
| 4 | 1 | 11 | Thiruvottiyur UPHC | 1 |
| 5 | 1 | 12 | Sathangadu UPHC | 1 |
| 6 | 1 | 14 | Thangal UPHC | 1 |
| 7 | 2 | 15 | Manali New town UPHC | 1 |
| 8 | 2 | 21 | Mannali UPHC | 1 |
| 9 | 3 | 22 | Puzhal UPHC | 1 |
| 10 | 3 | 26 | Madhavaram UPHC | 1 |
| 11 | 3 | 31 | Kannabiran Koil UPHC | 1 |
| 12 | 3 | 32 | Lakshmipuram UPHC | 1 |
| 13 | 4 | 35 | Kodungaiyur UPHC | 1 |
| 14 | 4 | 36 | Vivekanandha Nagar UPHC | 1 |
| 15 | 4 | 36 | Sharma Nagar UPHC | 1 |
| 16 | 4 | 37 | Vyasarpadi UPHC | 1 |
| 17 | 4 | 38 | R.K.Nagar UPHC | 1 |
| 18 | 4 | 39 | New washermenpet UPHC | 1 |
| 19 | 4 | 40 | V.O.C Nagar UPHC | 1 |
| 20 | 4 | 41 | Korukkupet UPHC | 1 |
| 21 | 4 | 42 | Jeeva Nagar UPHC | 1 |
| 22 | 4 | 43 | Tondaiyarpet UPHC | 1 |
| 23 | 4 | 44 | Perambur UPHC | 1 |
| 24 | 4 | 45 | Elango Nagar UPHC | 1 |
| 25 | 4 | 45 | Sathyamoorthy Nagar UPHC | 1 |
| 26 | 4 | 47 | Hari Narayanapuram UPHC | 1 |
| 27 | 4 | 48 | V.R. Nagar UPHC | 1 |
| 28 | 5 | 49 | Sanjeevirayanpet UPHC | 1 |
| 29 | 5 | 50 | Grace Garden UPHC | 1 |
| 30 | 5 | 52 | ECR UPHC | 1 |
| 31 | 5 | 53 | Kondithope UPHC | 1 |
| 32 | 5 | 54 | P.K. Garden UPHC | 1 |
| 33 | 5 | 55 | Seven Wells UPHC | 1 |
| 34 | 5 | 56 | BRN Garden UPHC | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| 35 | 5 | 56 | Amman Koil South UPHC | 1 |
| 36 | 5 | 58 | Perumalpet UPHC | 1 |
| 37 | 5 | 58 | Periyar Thidal UPHC (NGO) | 1 |
| 38 | 5 | 60 | Harbour UPHC | 1 |
| 39 | 5 | 62 | IRCS UPHC (NGO) | 1 |
| 40 | 5 | 63 | Pudupet UPHC | 1 |
| 41 | 6 | 64 | Anjugam Nagar (Kolathur 1) UPHC | 1 |
| 42 | 6 | 65 | Kolathur 2 UPHC | 1 |
| 43 | 6 | 65 | TVK Nagar UPHC | 1 |
| 44 | 6 | 66 | Agaram (S) UPHC | 1 |
| 45 | 6 | 67 | Sembuim UPHC | 1 |
| 46 | 6 | 68 | Siruvallur UPHC | 1 |
| 47 | 6 | 69 | N.A.Nagar (North) UPHC | 1 |
| 48 | 6 | 73 | Wadia Nagar UPHC | 1 |
| 49 | 6 | 73 | Pulianthope UPHC | 1 |
| 50 | 6 | 74 | MMA Nagar UPHC | 1 |
| 51 | 6 | 75 | Thandhai Periyar UPHC | 1 |
| 52 | 6 | 76 | C S Nagar UPHC | 1 |
| 53 | 6 | 77 | K.P.Park UPHC | 1 |
| 54 | 6 | 78 | Choolai UPHC | 1 |
| 55 | 7 | 79 | Oragadam UPHC | 1 |
| 56 | 7 | 80 | Menambedu UPHC | 1 |
| 57 | 7 | 81 | Venkatapuram UPHC | 1 |
| 58 | 7 | 83 | Korattur UPHC | 1 |
| 59 | 7 | 85 | Varadharajapuram UPHC | 1 |
| 60 | 7 | 86 | Athipet UPHC | 1 |
| 61 | 7 | 89 | Padi round building UPHC | 1 |
| 62 | 7 | 91 | Mugappair (West) UPHC | 1 |
| 63 | 7 | 93 | Mugappair (East) UPHC | 1 |
| 64 | 8 | 94 | Raja mangalam UPHC | 1 |
| 65 | 8 | 95 | Agathiar nagar UPHC | 1 |
| 66 | 8 | 95 | Villiwakkam 3 UPHC | 1 |
| 67 | 8 | 96 | N.A.Nagar (South) UPHC | 1 |
| 68 | 8 | 97 | Ayanavaram UPHC | 1 |
| 69 | 8 | 98 | P.S.Nagar UPHC | 1 |
| 70 | 8 | 100 | Aminjikarai West UPHC | 1 |
| 71 | 8 | 101 | Bharathi Puram UPHC | 1 |
| 72 | 8 | 102 | Shenoy Nagar UPHC | 1 |
| 73 | 8 | 103 | Kilpauk UPHC | 1 |
| 74 | 8 | 104 | Purusaiwakkam UPHC | 1 |
| 75 | 8 | 105 | MMDA UPHC | 1 |
| 76 | 8 | 106 | Aminjikarai East UPHC | 1 |
| 77 | 8 | 107 | Chetpet UPHC | 1 |
| 78 | 8 | 107 | Mangalapuram UPHC (NGO) | 1 |
| 79 | 9 | 109 | Periyar nagar UPHC | 1 |
| 80 | 9 | 110 | Pushpa nagar UPHC | 1 |
| 81 | 9 | 111 | Thousand light UPHC | 1 |
| 82 | 9 | 112 | Vadapalani East UPHC | 1 |
| 83 | 9 | 114 | Community Nursing College UPHC | 1 |
| 84 | 9 | 115 | Zambazzar UPHC | 1 |
| 85 | 9 | 116 | Triplicane UPHC | 1 |
| 86 | 9 | 117 | S.M.Nagar UPHC | 1 |
| 87 | 9 | 118 | Royapettah UPHC | 1 |
| 88 | 9 | 120 | Mirshahibpet UPHC | 1 |
| 89 | 9 | 121 | Krishnampet UPHC | 1 |
| 90 | 9 | 122 | Teynampet UPHC | 1 |

சுது.நக.எண். *NUHM/B2/3022/2021*

| | | | | |
|---|---|---|---|---|
| 91 | 9 | 123 | Beemanampet UPHC | 1 |
| 92 | 9 | 124 | Andra Mahila Sabha (Mylapore) UPHC (NGO) | 1 |
| 93 | 9 | 125 | Santhome UPHC | 1 |
| 94 | 9 | 126 | R.A. Puram UPHC | 1 |
| 95 | 10 | 127 | Koyambedu UPHC | 1 |
| 96 | 10 | 128 | Virugambakkam UPHC | 1 |
| 97 | 10 | 129 | Dasarathapuram UPHC | 1 |
| 98 | 10 | 130 | Vadapalani (West) UPHC | 1 |
| 99 | 10 | 131 | FPAI UPHC (NGO) | 1 |
| 100 | 10 | 132 | Ashok Nagar UPHC | 1 |
| 101 | 10 | 133 | Nallan Kuppam UPHC | 1 |
| 102 | 10 | 134 | Kodambakkam UPHC | 1 |
| 103 | 10 | 136 | T.Nagar UPHC | 1 |
| 104 | 10 | 137 | Nesapakkam UPHC | 1 |
| 105 | 10 | 138 | Jafferkhanpet UPHC | 1 |
| 106 | 10 | 139 | Saidapet West UPHC | 1 |
| 107 | 10 | 140 | Kumaran Nagar UPHC | 1 |
| 108 | 10 | 141 | C.I.T Nagar UPHC | 1 |
| 109 | 10 | 142 | Saidapet UPHC | 1 |
| 110 | 11 | 144 | Maduravoyal UPHC | 1 |
| 111 | 11 | 145 | Nerkundram 1 UPHC | 1 |
| 112 | 11 | 148 | Kamarajar Salai (Nerkundram 2) UPHC | 1 |
| 113 | 11 | 153 | Sakthi Nagar UPHC | 1 |
| 114 | 11 | 155 | Ramapuram UPHC | 1 |
| 115 | 12 | 156 | Mugalivakkam UPHC | 1 |
| 116 | 12 | 160 | Pazhavanthangal UPHC | 1 |
| 117 | 12 | 163 | Alandur UPHC | 1 |
| 118 | 12 | 164 | Adambakkam 1 UPHC | 1 |
| 119 | 12 | 166 | Nanganallur UPHC | 1 |
| 120 | 13 | 170 | Ekaduthangal UPHC | 1 |
| 121 | 13 | 171 | Kanammapet UPHC | 1 |
| 122 | 13 | 172 | Kotturpuram UPHC | 1 |
| 123 | 13 | 173 | Mandaveli UPHC | 1 |
| 124 | 13 | 174 | VHS UPHC (NGO) | 1 |
| 125 | 13 | 176 | Adyar UPHC | 1 |
| 126 | 13 | 177 | Sastri Nagar UPHC | 1 |
| 127 | 13 | 177 | Adambakkam 2 UPHC | 1 |
| 128 | 13 | 179 | Velachery UPHC | 1 |
| 129 | 13 | 180 | SRKV UPHC (NGO) | 1 |
| 130 | 13 | 182 | Thiruvanmiyur UPHC | 1 |
| 131 | 14 | 169 | Puzhuthivakkam UPHC | 1 |
| 132 | 14 | 185 | Palavakkam UPHC | 1 |
| 133 | 14 | 188 | Madipakkam UPHC | 1 |
| 134 | 14 | 189 | Pallikaranai UPHC | 1 |
| 135 | 14 | 191 | Jalladayanpet UPHC | 1 |
| 136 | 15 | 192 | Kabaleeshwarar nagar (Neelangarai) UPHC | 1 |
| 137 | 15 | 193 | Thuraipakkam UPHC | 1 |
| 138 | 15 | 195 | Kannagi Nagar UPHC | 1 |
| 139 | 15 | 197 | Sholinganallur UPHC | 1 |
| 140 | 15 | 200 | Semmanchery UPHC | 1 |
| | | | | 140 |

சுது.நக.எண். *NUHM/B2/3022/2021*

| GCC-Urban Community Health Centre | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| S.No | Zone. No | Div.No | Name of the UCHC | No of Sanitary Workers posted | No of Sanitary Workers newly sanctioned in Rop 2021-22 | Total |
| 1 | I | 11 | Thiruvottiyur | 9 | | 9 |
| 2 | II | 21 | Manali | 9 | | 9 |
| 3 | III | 23 | Puzhal | 9 | | 9 |
| 4 | IV | 47 | R.K. Nagar | 9 | | 9 |
| 5 | V | 49 | Sanjeevarayanpet UCHC | 9 | | 9 |
| 6 | VI | 73 | Pulianthope | 9 | 5 | 14 |
| 7 | VII | 87 | Padi | 9 | 5 | 14 |
| 8 | VIII | 96 | Ayanavaram | 9 | | 9 |
| 9 | IX | 119 | Mirsahibpet UCHC | 9 | | 9 |
| 10 | X | 134 | Vadapalani | 9 | | 9 |
| 11 | XI | 153 | Chinna Porur | 9 | 4 | 13 |
| 12 | XII | 160 | Alandur | 9 | 5 | 14 |
| 13 | XIII | 175 | Adyar | 9 | | 9 |
| 14 | XIV | 184 | Perungudi | 9 | 4 | 13 |
| 15 | XV | 195 | Kannagi Nagar | 9 | | 9 |
| 16 | | 200 | Injambakkam | 9 | | 9 |
| | | | | 144 | 23 | 167 |

| S.No | Zone. No | Div.No | Name of the EOC | No of Sanitary Worker posted |
|---|---|---|---|---|
| 1 | 5 | 58 | Perumalpet | 4 |
| 2 | 8 | 102 | Shenoy Nagar | 4 |
| 3 | 10 | 142 | Saidapet | 4 |
| | | | | 12 |

இந்த 319 துப்புரவு பணியாளர்களையும், 1 முதல் 15 மண்டலங்களிலும் மண்டல அலுவலர் மூலம் அந்தந்த மண்டலத்திலேயே தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்க குழுக்கள் (NULM) மூலம் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதை போன்றே மேலும் ஒராண்டு காலத்திற்கு துப்புரவு பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 14.07.2021 நாளிட்ட செயல்முறை ஆணையில் துப்புரவு பணியாளர்களுக்கு தினக்கூலியாக ஒரு நாளைக்கு ரூ.410/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே, ஒரு மாத கால ஊதியம் 26x410= ரூ.10,660/-ஆகும். எனவே ஒரு பணியாளருக்கு மாத ஊதியமாக ரூ.10,660/ ஆக நிர்ணயம் செய்து வழங்கலாம்.

**அட்டவணை எண்.4**

| வ எண் | மண்டலம் | தேவைப்படும் துப்புரவு பணியாளர்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையம் | நகர்ப்புற சமுதாய நல மையம் | மகப்பேறு மருத்துவமனை | மொத்தம் | மாத ஊதியம் ( ரூ) | ஒரு வருடத்திற்கு தேவைப்படும் தொகை ( ரூ) |
| 1 | 1 | 6 | 9 | | 15 | 10660 | 1918800 |
| 2 | 2 | 2 | 9 | | 11 | 10660 | 1407120 |
| 3 | 3 | 4 | 9 | | 13 | 10660 | 1662960 |
| 4 | 4 | 15 | 9 | | 24 | 10660 | 3070080 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5 | 5 | 13 | 9 | 4 | 26 | 10660 | 3325920 |
| 6 | 6 | 14 | 14 | | 28 | 10660 | 3581760 |
| 7 | 7 | 9 | 14 | | 23 | 10660 | 2942160 |
| 8 | 8 | 15 | 9 | 4 | 28 | 10660 | 3581760 |
| 9 | 9 | 16 | 9 | | 25 | 10660 | 3198000 |
| 10 | 10 | 15 | 9 | 4 | 28 | 10660 | 3581760 |
| 11 | 11 | 5 | 13 | | 18 | 10660 | 2302560 |
| 12 | 12 | 5 | 9 | | 14 | 10660 | 1790880 |
| 13 | 13 | 11 | 14 | | 25 | 10660 | 3198000 |
| 14 | 14 | 5 | 13 | | 18 | 10660 | 2302560 |
| 15 | 15 | 5 | 18 | | 23 | 10660 | 2942160 |
| | மொத்தம் | 140 | 167 | 12 | 319 | | 40806480 |

அட்டவணை எண்.5

| மொத்தம் பணியமர்த்த வேண்டிய துப்புரவு பணியாளர்கள் | தேசிய நகர்ப்புற சுகாதாரத் திட்டத்தில் வழங்கப்படும் மாத ஊதியம் ( ரூ) | மொத்தம் (ஒரு வருடத்திற்கு) (ரூ) (NUHM வழங்கும் தொகை) | சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் குறைந்த பட்ட ஊதியத்தின்படி வழங்கப்பட வேண்டிய மாத ஊதியம்( ரூ) | மொத்தம் ஒரு வருடத்திற்கு ஆகும் செலவு (ரூ) | வித்தியாச தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|
| 319 | 7283.43 | 2,78,81,000 | 10,660 | 4,08,06,480 | 1,29,25,480 |

தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தில் துப்புரவு பணியாளர்கள் பணியமர்த்தப்பட வழங்கப்பட்ட தொகை ரூ.2,78,81,000/-ஐ(ரூபாய் இரண்டு கோடியே எழுபத்தி எட்டு இலட்சத்து எண்பத்தி ஓராயிரம் மட்டும்) மாநகராட்சி நிதியில் செலுத்தலாம். மேலும், கூடுதலாக ஏற்படும் செலவினம் ரூ.1,29,25,480/ (ரூபாய் ஒரு கோடியே இருபத்தி ஒன்பது இலட்சத்து இருபத்தி ஐந்தாயிரத்து நானூற்றி எண்பது மட்டும்) மாநகராட்சி நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

மேலும், தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில் நிதி வழங்கப்படுவதால் மாதந்தோறும் பயனீட்டு சான்று மாநில சுகாதார சங்கத்திற்கு வழங்கப்பட வேண்டியுள்ளது. எனவே, துப்புரவு பணியாளர்கள் பணிபுரியும் விவரத்தினை சம்பந்தப்பட்ட மண்டல நல அலுவலர்கள் மாதந்தோறும் மாநகர நல அலுவலர் அவர்களுக்கு பயனீட்டு சான்று அளிக்கப்பட வேண்டும் .

எனவே,

1. மண்டலம் 1 முதல் 15 வரையில் 140 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள், 16 நகர்ப்புற சமுதாய நலமையங்கள் மற்றும் 3 மகப்பேறு மருத்துவமனைகளில் தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தில் ஒப்பளிக்கப்பட்ட 319 துப்புரவு பணியாளர்களையும், மண்டல அலுவலர் மூலம் அந்தந்த மண்டலத்திலேயே தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் குழுக்கள் (NULM) மூலம் தற்காலிகமாக 01.11.2021 முதல் 31.10.2022 வரை ஒரு வருட காலத்திற்கு துப்புரவு பணிகள் மேற்கொள்ள அனுமதியும்,
2. மாநகராட்சி மருத்துவமனைகளில் தரத்தினை உயர்த்த துப்புரவு பணியார்கள் பணியமர்த்துவது அத்தியாவசியம் என்பதாலும், தேசிய நகர்ப்புற சுகாதாரத் திட்டத்தில் வழங்கப்படும் ஊதியமானது மிகவும் குறைவாக உள்ளதாலும், துப்புரவு பணியில் ஈடுபடும் சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு ஊதியம் சென்னை மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி ரூ.410/- அடிப்படையில் மாத ஊதியம் ரூ.10,660/- என நிர்ணயித்து வழங்க அனுமதியும்,

3. மேற்கண்ட பணிக்கென தேவைப்படும் தொகை ரூ.4,08,06,480/- (ரூபாய் நான்கு கோடியே எட்டு லட்சத்து ஆறாயிரத்து நானூற்றி எண்பது மட்டும்) மேற்கொள்ள நிர்வாக அனுமதிக்கும்,
4. தேசிய நகர்ப்புற சுகாதாரத் திட்டத்தில் வழங்கப்படும் நிதி Human Resources-Salary for Sanitary workers from "Support Staff for Health Facilities-Other Support Staff" -FMR Code U.8.1.10.1, U.16.4.3.2 (any other (Admin Cost)) க்கென வழங்கப்பட்ட தொகை ரூ. 2,78,81,000/- (ரூபாய் இரண்டு கோடியே எழுபத்தி எட்டு எண்பத்தி ஓராயிரம் மட்டும்) மாநகராட்சியில் பிரிவு குறியீடு 30-31-01 கணக்கு குறியீடு 160-10-09-00-ல் செலுத்த அனுமதியும்,
5. தேசிய நகர்ப்புற சுகாதாரத் திட்டத்தில் வழங்கப்படும் நிதியினை விட கூடுதலாக ஏற்படும் செலவினம் ரூ.1,29,25,480/ (ரூபாய் ஒரு கோடியே இருபத்தி ஒன்பதாயிரத்து இருபத்தி ஐந்தாயிரத்து நானூற்றி எண்பது மட்டும்) மாநகராட்சி நிதியில் இருந்து மேற்கொள்ள அனுமதியும்,
6. துப்புரவு பணி செய்த நாட்களுக்கு அந்தந்த மண்டல மருத்துவ அலுவலர்களின் சான்று பெற்று அதன் அடிப்படையில் கணக்கிட்டு அந்தந்த மண்டலத்திலேயே ஊதியம் வழங்க அனுமதியும்,
7. ஊதிய தொகையினை பெருநகர சென்னை மாநகராட்சி நிதியில் இருந்து பெற்று மண்டல நல அலுவலர் அவர்களின் கணக்கில் செலுத்தி தொகுதி வாரியான குழுக்களின் வங்கி கணக்கிற்கு மாற்றி அதன் மூலம் ஊதியத்தினை தொழிலாளர்களின் வங்கி கணக்கில் செலுத்த அனுமதியும்,
8. தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில் நிதி வழங்கப்படுவதால் மாதந்தோறும் பயனீட்டு சான்று மாநில சுகாதார சங்கத்திற்கு வழங்கப்பட வேண்டியுள்ளதால், துப்புரவு பணியாளர்கள் பணிபுரியும் விவரத்தினை சம்பந்தப்பட்ட மண்டல நல அலுவலர்கள் மாதந்தோறும் மாநகர நல அலுவலர் அவர்களுக்கு பயனீட்டு சான்று அளிக்க அனுமதியும்,
9. 319 துப்புரவு பணியாளர்கள் பணியமர்த்தும் செலவினம் மாநகராட்சி நிதியில் அட்டவணை-4 ல் தெரிவிக்கப்பட்டவாறு ஒவ்வொரு மண்டலத்திலும் பிரிவு குறியீடு 30-32-02 கணக்கு குறியீடு 210-10-06-01 என்ற தலைப்பில் ரூ.4,08,06,480/- (ரூபாய் நான்கு கோடியே எட்டு லட்சத்து ஆறாயிரத்து நானூற்றி எண்பது மட்டும்) ஒதுக்கீடு செய்து செலவினம் மேற்கொள்ள அனுமதியும்,

மேற்கண்ட *1* முதல் *9* வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 30.10.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"*1* முதல் *9* வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**ம.நீ.வ.து.(செ.ந.பு.அ.)ந.க.எண்.பி3/1321-1/2021**

**தீர்மான எண். 823/2021** **நாள்:03-11-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மழைநீர் வடிகால் துறை (சென்னை நதிநீர் புனரமைப்பு அறக்கட்டளை) - சென்னை நதிநீர் புனரமைப்பு அறக்கட்டளை நிதியின் கீழ் - அடையாறு ஆற்றின் கரையோரம் (பகுதி - 1) திரு. வி. க. பாலம் முதல் எம். ஆர். டி. எஸ். பாலம் வரை பராமரிப்பு பாதை அமைத்தல் மற்றும் மரங்கள் நட்டு இரண்டு ஆண்டுகளுக்கு பராமரிக்கும் பணிக்கு குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரர் திரு. முகமது ஜமாலுதீன் அவர்களுக்கு பணியினை வழங்க அனுமதி.**

அரசாணை நிலை எண்.72, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(மா.ந.1) துறை, நாள்.12.07.2017ல் சென்னை நதிநீர் புனரமைப்பு அறக்கட்டளை நிதியின் கீழ் அடையாறு ஆற்றின் கரையோரம் பராமரிப்பு பாதை அமைத்தல் மற்றும் மரங்கள் நட்டு இரண்டு ஆண்டுகளுக்கு பராமரிக்கும் பணி.க்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிக்கான நிதியினை கோரி சென்னை நதிநீர் புனரமைப்பு அறக்கட்டளைக்கு கடிதம் எழுதவும் மற்றும் இந்த பணிக்கு குறுகிய கால மின் ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் முதன்மை செயலாளர் /ஆணையர் அவர்களின் 31/08/2021 நாளிட்ட ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

அதன்படி சென்னை நதிநீர் புனரமைப்பு அறக்கட்டளை நிதியின் கீழ் அடையாறு ஆற்றின் கரையோரம் (பகுதி - 1) திரு. வி. க. பாலம் முதல் எம். ஆர். டி. எஸ். பாலம் வரை பராமரிப்பு பாதை அமைத்தல் மற்றும் மரங்கள் நட்டு இரண்டு ஆண்டுகளுக்கு பராமரிக்கும் பணிக்கு ரூ.5,40,00,000/- மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள இரு உறைகள் முறையில் தகுதி வாய்ந்த ஒப்பங்கள் கோரி 29.09.2021 அன்று குறுகிய கால ஒப்ப அறிவிப்பு ஆங்கில நாளிதழான "தி டைம்ஸ் ஆப் இந்தியா" மற்றும் தமிழ் நாளிதழான "தினகரன்" நாளிதழ்களிலும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் 03.09.2021 அன்று பிரசுரிக்கப்பட்டது. மின்னணு முறையில் (e-tender) மட்டுமே ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

பெறப்பட்ட ஒப்பந்தத்திற்கான தொழில் நுட்ப ஆவணம் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் 29.09.2021 அன்று மின்னணு முறையில் திறக்கப்பட்டது. மொத்தம் நான்கு எண்ணிக்கையில் தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவைகளின் விவரங்கள் கீழ்வருமாறு :-

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் |
|---|---|
| 1 | திருவாளர்கள். ஆர். பி. பி. இன்ப்ரா ப்ராஜக்ட்ஸ் லிமிட்டெட் |
| 2 | திருவாளர்கள். வைஷ் கன்ஸ்ட்ரக்ஷன் கோ. |
| 3 | திருவாளர்கள் எம். கே. கன்ஸ்ட்ரக்ஷன் |
| 4 | திரு. முகமது ஜமாலுதீன் கான்ட்ராக்டர் |

திருவாளர்கள். வைஷ் கன்ஸ்ட்ரக்ஷன் கோ அவர்களின் ஒப்பந்த திறன்(Bid Capacity), தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளி நிபந்தனையில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளவாறு பணியின் மதிப்பை விட குறைவாக உள்ளதால் அவர்கள் தகுதி உடையவரராக கருதப்படவில்லை.

ஒப்பந்ததாரர்களின் தொழில் நுட்ப ஆவணங்கள் பரிசீலக்கப்பட்டதில் கீழ்வரும் தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் தகுதி வாய்ந்த தொழில் நுட்ப ஒப்பந்த புள்ளிகளாக இருந்தன. அவைகளின் விவரங்கள் கீழ் வருமாறு :-

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் |
|---|---|
| 1 | திருவாளர்கள். ஆர். பி. பி. இன்ப்ரா ப்ராஜக்ட்ஸ் லிமிட்டெட் |
| 2 | திருவாளர்கள் எம். கே. கன்ஸ்ட்ரக்ஷன் |
| 3 | திரு. முகமது ஜமாலுதீன் கான்ட்ராக்டர் |

**ம.நீ.வ.து.(செ.ந.பு..அ.).ந.க.எண்.பி3/1321-1/2021**

எனவே, மேற்சொன்ன தகுதி வாய்ந்த 3 ஒப்பந்தாரர்களின் விலைவிகித ஒப்பந்தப்புள்ளி (Financial Bid) 04.10.2021 அன்று திறக்கப்பட்டது. குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் விலை விவரப்பட்டியல் பின்வருமாறு:

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | பணியின் அலுவலக தொகை 2020-21 ஆண்டு அலுவலக விலைப் பட்டியலின்படி (12 சதவீதம் GST சேர்த்து) (ரூபாய்) | ஒப்பந்ததாரர் அளித்த தொகை (12 சதவீதம் GST சேர்த்து) (ரூபாய்) | 2020-21 அலுவலக விலை விகிதம் விழுக்காடு அதிகம் /குறைவு (GST வரி 12 % உட்பட) |
|---|---|---|---|---|
| 01 | திருவாளர்கள். ஆர். பி. பி. இன்ப்ரா ப்ராஜக்ட்ஸ் லிமிட்டெட் | 5,11,98,828.80 | 6,03,75,706.87 | (+)17.9200% |
| 02 | திரு. முகமது ஜமாலுதீன் காண்ட்ராக்டர் | 5,11,98,828.80 | 4,86,38,938.56 | (-) 4.9999% |
| 03 | திருவாளர்கள் எம். கே. கன்ஸ்ட்ரக்ஷன் | 5,11,98,828.80 | 4,86,44,007.24 | (-) 4.9900% |

மேற்கண்ட அட்டவணையில் உள்ள குறைந்த விலை விகிதம் அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகையானது 2020-21ம் ஆண்டு (12 சதவீதம் GST சேர்த்து) விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீடு தொகையை விட (-) 5.00% குறைவாகும்.

குறைவான ஒப்ப சதவீதம் அளித்துள்ள திரு. முகமது ஜமாலுதீன் காண்ட்ராக்டர் அவர்களுக்கு 06.10.2021 அன்று விலை குறைப்பு பேச்சு வார்த்தை நடத்த கடிதம் அனுப்பப்பட்டதில், அவர் தனது விலை விகிதத்தை 08.10.2021 நாளிட்ட கடிதத்தில் (-)5.00%லிருந்து (-) 5.25% என்று திருத்திய விலை விகிதத்தை அளித்துள்ளார். இதன் படி அவரது ஒப்பத்தொகை ரூ.4,85,10,890.30 என்று வருகிறது-

அவரிடம் மேலும் இரண்டாவது முறையாக விலைகுறைப்பு பேச்சுவார்த்தை நடத்த அவருக்கு 11.10.2021 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டதில், அவர்கள் ஏற்கனவே மிக குறைவான ஒப்பத் தொகையை கோரியுள்ளதாகவும், மேலும் கட்டுமான பொருட்கள் விலை ஏறியுள்ளதாலும் மற்றும் பணியாளர்களின் சம்பளம் அதிகமாக உள்ளதாலும் மேற்கொண்டும் ஒப்பத்தொகையினை குறைக்க இயலாது என்று 13.10.2021 நாளிட்ட கடிதத்தில் கூறியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு, சென்னை நதிநீர் புனரமைப்பு அறக்கட்டளை நிதியின் கீழ் அடையாறு ஆற்றின் கரையோரம் (பகுதி -1) திரு. வி. க. பாலம் முதல் எம். ஆர். டி. எஸ். பாலம் வரை பராமரிப்பு பாதை அமைத்தல் மற்றும் மரங்கள் நட்டு இரண்டு ஆண்டுகளுக்கு பராமரிக்கும் பணிக்கு குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த திரு. முகமது ஜமாலுதீன் காண்ட்ராக்டர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதமான (-)5.25% மற்றும் ஒப்பத்தொகையான ரூ4,85,10,890.30ஐ ஏற்று, ஒப்பந்ததாரருக்கு இப்பணியினை வழங்க 18-10-2021 அன்று நடந்த கூட்டத்தில் ஒப்பங்கள் கூர்ந்தாய்வுக் குழுமம் சீரிய கூர்ந்தாய்வுக்குப்பின் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எனவே, ஒப்பங்கள் கூர்ந்தாய்வுக் குழுமம் பரிந்துரைக்கப்பட்டதன் அடிப்படையில் சென்னை நதிநீர் புனரமைப்பு அறக்கட்டளை நிதியின் கீழ் அடையாறு ஆற்றின் கரையோரம் ( பகுதி - 1) திரு. வி. க. பாலம் முதல் எம். ஆர். டி. எஸ். பாலம் வரை பராமரிப்பு பாதை அமைத்தல் மற்றும் மரங்கள் நட்டு இரண்டு ஆண்டுகளுக்கு பராமரிக்கும் பணியினை குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த திரு. முகமது ஜமாலுதீன் காண்ட்ராக்டர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலை

விகிதமான (-)5.25% மற்றும் ஒப்பத்தொகையான ரூ4,85,10,890.30 (ரூபாய் நான்கு கோடியே எண்பத்தைந்து இலட்சத்து பத்தாயிரத்து எண்ணூற்று தொண்ணூறு மற்றும் முப்பது பைசா மட்டும்)ஐ ஏற்று, மன்ற தீர்மான எண்.576/2013, நாள்.29.08.2013ன்படி கூடுதல் வைப்பு தொகையாக இப்பணியின் மதிப்பில் 2 சதவீதமான ரூ.10.24 இலட்சம் தொகையினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒப்பந்ததாரருக்கு இப்பணியினை வழங்க சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 30.10.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"ஒப்பம் வழங்க, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

* * * * * *

மநீ.வ.து.(செ.ந.பு.அ.)ந.க.எண்.பி3/1321-2/2021

**தீர்மான எண். 824/2021** **நாள்:03-11-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மழைநீர் வடிகால் துறை(சென்னை நதிநீர் புனரமைப்பு அறக்கட்டளை) - சென்னை நதிநீர் புனரமைப்பு அறக்கட்டளை நிதியின் கீழ் - அடையாறு ஆற்றின் கரையோரம் (பகுதி -2) எம். ஆர். டி. எஸ். பாலம் முதல் கோட்டூர்புரம் பாலம் வரை பராமரிப்பு பாதை அமைத்தல் மற்றும் மரங்கள் நட்டு இரண்டு ஆண்டுகளுக்கு பராமரிக்கும் பணிக்கு குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரர் திரு. முகமது ஜமாலுதீன் அவர்களுக்கு பணியினை வழங்க அனுமதி.**

அரசாணை நிலை எண்.72, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(மா.ந.1) துறை, நாள்.12.07.2017ல் சென்னை நதிநீர் புனரமைப்பு அறக்கட்டளை நிதியின் கீழ் அடையாறு ஆற்றின் கரையோரம் பராமரிப்பு பாதை அமைத்தல் மற்றும் மரங்கள் நட்டு இரண்டு ஆண்டுகளுக்கு பராமரிக்கும் பணி.க்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட மேற்சொன்ன பணிக்கான நிதியினை கோரி சென்னை நதிநீர் புனரமைப்பு அறக்கட்டளைக்கு கடிதம் எழுதவும் மற்றும் இந்த பணிக்கு குறுகிய கால மின் ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் முதன்மை செயலாளர் /ஆணையர் அவரிகளின் 31.08.2021 நாளிட்ட ஒப்புதல் பெறப்பட்டுள்ளது-

அதன்படி சென்னை நதிநீர் புனரமைப்பு அறக்கட்டளை நிதியின் கீழ் அடையாறு ஆற்றின் கரையோரம் பராமரிப்பு பாதை அமைத்தல் மற்றும் மரங்கள் நட்டு இரண்டு ஆண்டுகளுக்கு பராமரிக்கும் பணிக்கு (பகுதி - 2) எம். ஆர். டி. எஸ். பாலம் முதல் கோட்டூர்புரம் பாலம் வரை, ரூ.5,80,00,000/- மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள இரு உறைகள் முறையில் தகுதி வாய்ந்த ஒப்பங்கள் கோரி 29.09.2021 அன்று குறுகிய கால ஒப்ப அறிவிப்பு ஆங்கில நாளிதழான "தி டைம்ஸ் ஆப் இந்தியா" மற்றும் தமிழ் நாளிதழான "தினகரன்" நாளிதழ்களிலும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் 03.09.2021 அன்று பிரசுரிக்கப்பட்டது. மின்னணு முறையில் (e-tender) மட்டுமே ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

பெறப்பட்ட ஒப்பந்தத்திற்கான தொழில் நுட்ப ஆவணம் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் 29.09.2021 அன்று மின்னணு முறையில் திறக்கப்பட்டது. மொத்தம் நான்கு எண்ணிக்கையில் தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவைகளின் விவரங்கள் கீழ்வருமாறு :-

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் |
|---|---|
| 1 | திருவாளர்கள். ஆர். பி. பி. இன்ப்ரா ப்ராஜக்ட்ஸ் லிமிட்டெட் |
| 2 | திருவாளர்கள். வைஷ் கன்ஸ்ட்ரக்ஷன் கோ. |
| 3 | திருவாளர்கள் எம். கே. கன்ஸ்ட்ரக்ஷன் |
| 4 | திரு. முகமது ஜமாலுதீன் கான்ட்ராக்டர் |

திருவாளர்கள். வைஷ் கன்ஸ்ட்ரக்ஷன் கோ. அவர்களின் ஒப்பந்த திறன் (Bid Capacity), தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளி நிபந்தனையில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளவாறு பணியின் மதிப்பை விட குறைவாக உள்ளதால் அவர்கள் தகுதி உடையவராக கருதப்படவில்லை.

ஒப்பந்ததாரர்களின் தொழில் நுட்ப ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதில் கீழ்வரும் தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் தகுதி வாய்ந்த தொழில் நுட்ப ஒப்பந்த புள்ளிகளாக இருந்தன. அவைகளின் விவரங்கள் கீழ் வருமாறு :-

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் |
|---|---|
| 1 | திருவாளர்கள். ஆர். பி. பி. இன்ப்ரா ப்ராஜக்ட்ஸ் லிமிட்டெட் |
| 2 | திருவாளர்கள் எம். கே. கன்ஸ்ட்ரக்ஷன் |
| 3 | திரு. முகமது ஜமாலுதீன் கான்ட்ராக்டர் |

எனவே, மேற்சொன்ன தகுதி வாய்ந்த 3 ஒப்பந்தாரர்களின் விலைவிகித ஒப்பந்தப்புள்ளி (Financial Bid) 04.10.2021 அன்று திறக்கப்பட்டது. குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் விலை விவரப்பட்டியல் பின்வருமாறு:

| வ. எ ண். | ஒப்பந்ததாரர் பெயர் | பணியின் அலுவலக தொகை 2020-21 ஆண்டு அலுவலக விலைப் பட்டியலின்படி (12 சதவீதம் GST சேர்த்து) (ரூபாய்) | ஒப்பந்ததாரர் அளித்த தொகை (12 சதவீதம் GST சேர்த்து) (ரூபாய்) | 2020-21 அலுவலக விலை விகிதம் விழுக்காடு அதிகம் /குறைவு (GST வரி 12 % உட்பட) |
|---|---|---|---|---|
| 01 | திருவாளர்கள். ஆர். பி. பி. இன்ப்ரா ப்ராஜக்ட்ஸ் லிமிட்டெட் | 5,50,33,395.20 | 6,49,00,882.96 | (+)17.9300% |
| 02 | திரு. முகமது ஜமாலுதீன் கான்ட்ராக்டர் | 5,50,33,395.20 | 5,22,81,780.47 | (-) 4.9999% |
| 03 | திருவாளர்கள் எம். கே. கன்ஸ்ட்ரக்ஷன் | 5,50,33,395.20 | 5,22,87,228.78 | (-) 4.9900% |

மேற்கண்ட அட்டவணையில் உள்ள குறைந்த விலை விகிதம் அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகையானது 2020-21ம் ஆண்டு (12 சதவீதம் GST சேர்த்து) விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீடு தொகையை விட (-) 5.00% குறைவாகும்.

குறைவான விலை விகிதம் அளித்துள்ள திரு. முகமது ஜமாலுதீன் கான்ட்ராக்டர் அவர்களுக்கு 06.10.2021 அன்று விலை குறைப்பு பேச்சு வார்த்தை நடத்த கடிதம் அனுப்பப்பட்டதில், அவர் தனது விலை விகிதத்தை 08.10.2021 நாளிட்ட கடிதத்தில் (-)5.00%லிருந்து (-)5.25% என்று திருத்திய விலை விகிதத்தை அளித்துள்ளார். இதன் படி அவரது ஒப்பத்தொகை ரூ.5,21,44,142.00 என்று வருகிறது-

அவரிடம் மேலும் இரண்டாவது முறையாக விலைகுறைப்பு பேச்சுவார்த்தை நடத்த அவருக்கு 11.10.2021 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டதில், அவர்கள் ஏற்கனவே மிக குறைவான ஒப்பத் தொகையை கோரியுள்ளதாகவும் மேலும் கட்டுமான பொருட்கள் விலை ஏறியுள்ளதாலும் மற்றும் பணியாளர்களின் சம்பளம் அதிகமாக உள்ளதாலும் மேற்கொண்டும் ஒப்பத்தொகையினை குறைக்க இயலாது என்று 13.10.2021 நாளிட்ட கடிதத்தில் கூறியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு, சென்னை நதிநீர் புனரமைப்பு அறக்கட்டளை நிதியின் கீழ் அடையாறு ஆற்றின் கரையோரம் (பகுதி - 2) எம். ஆர். டி. எஸ். பாலம் முதல் கோட்டூர்புரம் பாலம் வரை பராமரிப்பு பாதை அமைத்தல் மற்றும் மரங்கள் நட்டு இரண்டு ஆண்டுகளுக்கு பராமரிக்கும் பணிக்கு (குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த திரு. முகமது ஜமாலுதீன் காண்ட்ராக்டர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதமான (-)5.25% மற்றும் ஒப்பத்தொகையான ரூ.5,21,44,142.00-ஐ ஏற்று ஒப்பந்ததாருக்கு இப்பணியினை வழங்க 18-10-2021 அன்று நடந்த கூட்டத்தில் ஒப்பங்கள் கூர்ந்தாய்வுக் குழுமம் சீரிய கூர்ந்தாய்வுக்குப்பின் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எனவே, ஒப்பங்கள் கூர்ந்தாய்வுக் குழுமம் பரிந்துரைக்கப்பட்டதன் அடிப்படையில் சென்னை நதிநீர் புனரமைப்பு அறக்கட்டளை நிதியின் கீழ் அடையாறு ஆற்றின் கரையோரம் (பகுதி - 2) எம். ஆர். டி. எஸ். பாலம் முதல் கோட்டூர்புரம் பாலம் வரை பராமரிப்பு பாதை அமைத்தல் மற்றும் மரங்கள் நட்டு இரண்டு ஆண்டுகளுக்கு பராமரிக்கும் பணியினை குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த திரு. முகமது ஜமாலுதீன் காண்ட்ராக்டர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதமான **(-) 5.25%** மற்றும் ஒப்பத்தொகையான **ரூ5,21,44,142.00**-ஐ (ரூபாய் ஐந்து கோடியே இருபத்தியோரு இலட்சத்து நாற்பத்தி நான்காயிரத்து நூற்று நாற்பத்தியிரண்டு மட்டும்) ஐ ஏற்று, மன்ற தீர்மான எண்.576/2013, நாள்.29.08.2013ன் படி கூடுதல் வைப்பு தொகையாக

**<u>ம.நீ.வ.து.(செ.ந.பு..அ.).ந.க.எண்.பி3/1321-2/2021</u>**

இப்பணியின் மதிப்பில் *2* சதவீதமான **ரூ.*11.00* இலட்சம்** தொகையினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒப்பந்ததாரருக்கு இப்பணியினை வழங்க சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 29.10.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"ஒப்பம் வழங்க, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*** * * * * ***

**பொ.து.ந.க.எண்.ஈ1/22397/2021**

**தீர்மானஎண். 825/2021** **நாள்:07-11-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திரு. A.B ஸ்ரீகுமார், செயற் பொறியாளர், தரக்கட்டுப்பாட்டு துறை அவர்கள்08.11.2021 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதி.**

தலைமை பொறியாளர் (தரக்கட்டுப்பாடு துறை) அவர்களின் 13.10.2021 நாளிட்ட குறிப்பில், பெருநகர சென்னை மாநகராட்சி, தரக்கட்டுப்பாடு துறையில் செயற்பொறியாளராக பணிபுரிந்துவரும் திரு. A.B ஸ்ரீகுமார் அவர்கள் 11.08.2021 நாளிட்ட கடிதத்தில், தனக்கு குடும்ப சூழ்நிலை காரணமாக தன்னை தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதி அளிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

திரு. A.B ஸ்ரீகுமார், செயற் பொறியாளர் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சியில் 02.07.1993 அன்று உதவி பொறியாளராக பணியில் சேர்ந்து உதவி செயற் பொறியாளராக 10.06.2010 அன்று பதவி உயர்வு பெற்று அதனை தொடர்ந்து செயற் பொறியாளராக 01.03.2014 அன்று பதவி உயர்வு பெற்றுள்ளார். தற்போது தரக்கட்டுப்பாடு துறையில் பணிபுரிந்து வருகிறார். தனியர் உதவி பொறியாளர் பதவியில் தகுதிகாண்பருவம் முடித்துள்ளார். உதவி பொறியாளர், உதவி செயற் பொறியாளர் மற்றும் செயற் பொறியாளர் ஆகிய மூன்று பதவிகளிலும் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. தன்விருப்ப ஓய்வு விதிகளின்படி தனியர் 20 ஆண்டுகாலம் பணிபூர்த்தி செய்தும், 50 வயதை கடந்தும் உள்ளார். தனியரின் பிறந்த தேதி 04.05.1966 ஆகும்.

மேலும், தனியர் பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்த மண்டலம்-2ஐ தவிர்த்து கீழ்குறிப்பிட்ட அனைத்துத்துறை / மண்டலங்களிலிருந்து தனியரை பெறுப்பாக்கும் தணிக்கை தடை மற்றும் நேர் செய்யப்படாத முன்பணங்கள் அலுவலக முன்பணங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை என சான்றுகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண். | பணியிடம் | பணியில் சேர்ந்த நாள் | விடுவிக்கப்பட்ட நாள் | பதவி |
|---|---|---|---|---|
| 1 | கட்டிடத்துறை | 02.07.1993 | 18.02.1999 | உதவி பொறியாளர் |
| 2 | மண்டலம் -V, மண்டலம்-VI (பழைய மண்டலம்-III) | 19.02.1999 | 09.09.1999 | உதவி பொறியாளர் |
| 3 | மழைநீர்வடிகால் துறை | 09.09.1999 | 29.11.2001 | உதவி பொறியாளர் |
| 4 | மண்டலம்-IX (பழைய மண்டலம்-VII) | 30.11.2001 | 03.12.2007 | உதவி பொறியாளர் |
| 5 | மண்டலம்-VI (பழைய மண்டலம்-IV) | 03.12.2007 | 09.06.2010 | உதவி பொறியாளர் |
| 6 | கட்டிடத்துறை | 10.06.2010 | 29.01.2014 | உதவி செயற் பொறியாளர் |
| 7 | தெற்கு வட்டார அலுவலகம் | 30.01.2014 | 01.03.2014 | உதவி செயற் பொறியாளர் |
| 8 | மண்டலம்-VI | 01.03.2014 | 14.07.2014 | செயற்பொறியாளர் |
| 9 | பணித்துறை (தரக்கட்டுப்பாடு வடக்கு) | 14.07.2014 | 30.12.2014 | செயற்பொறியாளர் |
| 10 | வடக்கு வட்டார அலுவலகம் (SWM) | 31.12.2014 | 26.10.2015 | செயற்பொறியாளர் |
| 11 | மண்டலம்-V | 27.10.2015 | 23.08.2016 | செயற்பொறியாளர் |
| 12 | மழைநீர் வடிகால் துறை (பணிமாற்று அடிப்படையில் SWM) | 24.08.2016 | 10.05.2018 | செயற்பொறியாளர் |
| 13 | மண்டலம்-II | 10.05.2018 | 02.07.2019 | செயற்பொறியாளர் |
| 14 | மண்டலம்-IV | 02.07.2019 | 18.10.2019 | செயற்பொறியாளர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 15 | மண்டலம்-IV (பணிமாற்று அடிப்படையில் SWM) | 18.10.2019 | 23.09.2020 | செயற்பொறியாளர் |
| 16 | மண்டலம்- IV (பணிமாற்று அடிப்படையில் வடக்கு வட்டார அலுவலகம்) | 23.09.2020 | 17.07.2021 | செயற்பொறியாளர் |
| 17 | தரக்கட்டுப்பாடு துறை | 18.07.2021 | இந்நாள்வரை | செயற்பொறியாளர் |

இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு துறை அவர்களின் 27.09.2021 நாளிட்ட கடிதத்தில், திரு. A.B ஸ்ரீகுமார், செயற் பொறியாளர், தரக்கட்டுப்பாடு துறை அவர்கள் மீது இன்றைய தேதியில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது,

பெருநகர சென்னை மாநகராட்சி, விழிப்பு குழுமத்தில் திரு. A.B ஸ்ரீகுமார், செயற் பொறியாளர், தரக்கட்டுப்பாடு துறை அவர்கள் மீது இன்றைய தேதியில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என 28.09.2021 நாளிட்ட அறிக்கை பெறப்பட்டுள்ளது,

நிதி ஆலோசகர் அவர்களின் 23.09.2021 நாளிட்ட கடிதத்தில், தனியர் உதவி பொறியாளர், உதவி செயற் பொறியாளர் மற்றும் செயற் பொறியாளராக துறை மண்டலங்களில் பணிபுரிந்த காலங்களில் 1993-94 ஆம் ஆண்டு முதல் 2019-20ஆம் ஆண்டு வரை தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள், இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதித்தணிக்கை அறிக்கைகளின்படி மொத்தம் ரூ.3,06,611/- உள்ளடக்கிய 16 தணிக்கை தடைப்பத்தி கூட்டுப்பொறுப்பு மற்றும் தனிப்பொறுப்பில் நிலுவையில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. தனிப்பொறுப்பில் மொத்தம் ரூ.1,20,979 உள்ளடக்கிய 16 தணிக்கை தடைப்பத்தி தனிப்பொறுப்பில் நிலுவையில் உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் விவரங்கள் பின் வருமாறு.

| வ.எண் | மண்டலம் / துறை | ஆண்டு | பத்தி எண் | தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டத் தொகை ரூ. | தடைக்கு பொறுப்பான பணியாளர்களின் எண்ணிக்கை மொத்தம் | திரு. A.B ஸ்ரீகுமார், செயற் பொறியாளர் அலுவலரை பொறுப்பாக்கும் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1. | புதிய மண்டலம் -6 (பழைய மண்டலம் -2 | 2008-2009 | 51 | 27,607 | 2 | 13.804 |
| 2. | மண்டலம் -2 | 2018-2019 | 48 | - | - | - |
| 3. | | 2019 - 2020 | 31 | - | - | - |
| 4. | | | 32 | - | - | - |
| 5. | | | 33 | - | - | - |
| 6. | | | 34 | - | - | - |
| 7. | | | 39 | 70,465 | 1 | 70,465 |
| 8. | | | 40 | 6995 | 1 | 6995 |
| 9. | | | 45 | - | - | - |
| 10. | | | 46 | 1127 | 1 | 1127 |
| 11. | | | 47 | 4040 | 1 | 4040 |
| 12. | | | 48 | - | - | - |
| 13. | மண்டலம் -4 | 2019-2020 | 18அ | 76389 | 8 | 9549 |
| 14 | | | 18ஆ | 61397 | 8 | 7675 |
| 15 | | | 19 | 35474 | 8 | 4434 |
| 16 | | | 21 | 23116 | 8 | 2890 |
| | | மொத்தம் | 16 | 3,06,611 | - | 1,20,979 |

மேலும், 2020-2021 முதல் 2021-2022 ஆம் ஆண்டு வரை உள்ளாட்சி நிதித்தணிக்கை துறையால் தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர் தனியர் மீது ஏதேனும் தணிக்கைத்

**பொ.து.ந.க.எண்.ஈ1/22397/2021**

தடைகள் தெரியவரும் பட்சத்தில் தனியர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தனியர் மீது தரக்கட்டுப்பாடு துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கை அல்லது விசாரணைகள் நிலுவையில் ஏதும் இல்லை என தெரிவித்து கொள்ளப்படுகிறது. தனியர் மீது சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஏதும் இல்லை என சான்றிதழ் பெறப்பட்டுள்ளது.

ஆணையர் அவர்களின் 31.12.2020 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையின் மீது 31.12.2020 அன்று முதல் "கண்டனம்" தண்டனை வழங்கப்பட்டு தற்போது தண்டனை நிலுவையில் உள்ளது.

மண்டல அலுவலர் 2 அவர்களின் 02.11.2021 நாளிட்ட குறிப்பில், தற்போது மண்டலம் 2ல் 10.05.2018 முதல் 02.07.2019 வரை பணிபுரிந்த காலங்களில் தனியரை பொறுப்பாகும் தணிக்கை தடை 2018-19 ஆம் ஆண்டு பத்தி எண். 48, 2019-20 ஆம் ஆண்டு பத்தி எண். 30 அ, இ, ஈ, 31,32,33,34,35,36,37,39,40,41,45,46,47,48 ஆகிய பத்திகள் நீக்கம் மற்றும் பொறுப்பு நீக்கம் செய்யப்பட்டு தணிக்கை தடை பத்திகள் நிலுவையில் ஏதும் இல்லை என மண்டல அலுவலரது கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்டல அலுவலர் 6 அவர்களின் 02.11.2021 நாளிட்ட குறிப்பில், மண்டலம்-6ல் 2008-2009ல் தனியரை பொறுப்பாக்கும் தணிக்கை தடை பத்தி எண்.51 பணமதிப்புள்ள பத்தி என்பதால் தனியருக்கு நிர்ணயிக்கப்பட்ட தொகை ரூ.13,804/- 01.11.2021 அன்று கருவூலத்தில் செலுத்தி விட்டார் என்றும், தனியர் மீது மண்டலம் 6ல் எந்த பத்தி நிலுவையில் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செயற் பொறியாளர்-4 அவர்களின் 03.11.2021 நாளிட்ட குறிப்பில், மண்டலம் 4ல் தனியர் மீது தணிக்கை தடை நிலுவை உள்ள 2019-2020 ஆம் ஆண்டு பத்தி எண். 18 (அ), 18(ஆ), 19, மற்றும் 21 ஆகிய பத்திகள் பணமதிப்புள்ள பத்தி என்பதால் நிர்ணயிக்கப்பட்ட தொகை ரூ.25,548/- 02.11.2021 அன்று கருவூலத்தில் செலுத்தி விட்டார் என்றும், தனியர் மீது மண்டலம் 4ல் எந்த பத்தி நிலுவையில் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 2020-2021 முதல் 2021-2022 வரை உள்ளாட்சி நிதித் தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கைத்தடை பத்திகள் பணியாளரை சார்ந்தது என்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில் தனியரை முழுபொறுப்பாக்கியும் அன்னாருக்கு வழங்கப்படும் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்ய தனியரிடமிருந்து உறுதிமொழி பத்திரம் பெறப்பட்டுள்ளது.

தனியர் வகித்து வரும் பதவி வகுப்பு II ன் கீழ் வருவதால் இப்பதவியில் உள்ளவர்களை ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்கள் வசம் உள்ளது.

எனவே, திரு. A.B ஸ்ரீகுமார், செயற் பொறியாளர் அவர்கள் மீது தடைப்பத்திகள் கூட்டுப்பொறுப்பு மற்றும் தனிப்பொறுப்பு ஏதும் நிலுவையில் இல்லை என மண்டலம் 2, 4 மற்றும் 6 ஆகிய மண்டலங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 2020-2021 முதல் 2021-2022 வரை உள்ளாட்சி நிதித் தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கைத்தடை பத்திகள் பணியாளரை சார்ந்தது என்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில் தனியரை முழுபொறுப்பாக்கியும் அன்னாருக்கு வழங்கப்படும் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தி, தனியரை 08.11.2021 பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் **(VRS)** செல்ல அனுமதிக்க, சிறப்புஅதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய, முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 03.11.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"தன்விருப்ப ஓய்வில் செல்ல, சிறப்புஅதிகாரி-மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

* * * * * *

**M.E.D.C.No.M1/2376/2021**

**Resolution No.830/2021** **Date:10-11-2021**

**Greater Chennai Corporation – Mechanical Engineering Department –Tata Ace vehicles along with man power (Minimum 4) to be hired by Zones for deployment in flood prone areas of Zones to attend the emergency needs-lowest rates arrived –Administrative sanction approval – For orders.**

During the review meeting conducted by Chief Engineer (General) on 26.10.2021, Zonal Executive Engineers have requested to deploy additional Tata Ace vehicles along with man power (Minimum 4 nos.) for Zones I to XV to attend the emergency needs during monsoon season as a precautionary measure.

Accordingly, rates have been worked out for engaging the TATA ACE vehicles along with man power (Minimum 4 Nos) for each zone.

These vehicles are mainly required during monsoon season (i.e.) from November– 2021 to December 2021 to attend the emergency flood relief work on need basis.

| SL. NO | ZONE | No.of Units | Total No.of Tata Ace vehicles (with 4 Nos of Manpower per vehicle) Allotted (A) | Total Estimate amount for 2 Months (Rs.4063x60 days x A) in Rs. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | I | 3 (Unit 1-3) | 3 | 7,31,340 |
| 2 | II | 2 (Unit 4-5) | 2 | 4,87,560 |
| 3 | III | 3 (Unit 6-8) | 3 | 7,31,340 |
| 4 | IV | 3 (Unit 9-11) | 3 | 7,31,340 |
| 5 | V | 3 (Unit 12-14) | 3 | 7,31,340 |
| 6 | VI | 3 (Unit 15-17) | 3 | 7,31,340 |
| 7 | VII | 3 (Unit 18-20) | 3 | 7,31,340 |
| 8 | VIII | 3 (Unit 21-23) | 3 | 7,31,340 |
| 9 | IX | 4 (Unit 24-27) | 4 | 9,75,120 |
| 10 | X | 4 (Unit 28-31) | 4 | 9,75,120 |
| 11 | XI | 3 (Unit 32-34) | 3 | 7,31,340 |
| 12 | XII | 3 (Unit 35-37) | 3 | 7,31,340 |
| 13 | XIII | 4 (Unit 38-40A) | 4 | 9,75,120 |
| 14 | XIV | 3 (Unit 41-43) | 3 | 7,31,340 |
| 15 | XV | 2 (Unit 41-43) | 2 | 4,87,560 |
| **TOTAL** | | **46** | **46** | **1,12,13,880** |

The department rate for the hiring of Tata Ace vehicles along with man power (Minimum 4 Nos) worked out to Rs.4063/- per day (8 hrs shift) per vehicle (i.e 1803 for hiring Tata Ace and Rs.1640/-for hiring 4 Nos. of man power and 18 % GST) The above rate is inclusive of Fuel, Operator Charges, Driver Batta and GST.

All Zonal Officers may be asked to ensure

1. Proper utilization of Tata Ace vehicles along with man power (Minimum 4 Nos) for a period from November– 2021 to December 2021 by adopting the above mentioned rates.
2. In order to ensure the proper utilization of Tata Ace vehicles along with man power (Minimum 4 nos.), operation trip sheet should be supported with necessary photographs and the same should be submitted along with the bills. The Satisfactory work completion certificate by Concerned Divisional A.E, A.E.E, E.E., and Zonal Officer must also be submitted along with the bills.
3. The Zonal Officer may be asked to execute the above work and settle the bills from the Zonal fund.

**M.E.D.C.No.M1/2376/2021**

4. The Executive Engineers of respective Zones may be asked to ensure that the works are taken up only based on the necessity and monitor the out turn of the works that are taken up and to ensure that vehicles not exceeding the allotment mentioned.

It is further stated that, Zone wise tender may be called and settled by respective Zone as per Tender Transparency act and works may be executed with proper supervision and documentation based on the above rates.

The payment for the above work will be made by Zones under respective budget head 230-80-04-00 hire charges allotted to Zones by getting additional Funds.

Hence,

1. To adopt the above mentioned rates of Rs.4063/- per day (8 hrs shift) per vehicle towards Hiring of Tata Ace vehicles along with man power (Minimum 4 Nos) [(i.e 1803 for hiring Tata Ace and Rs.1640/-for hiring 4 Nos. of man power and 18 % GST] with the above terms and conditions by Zones for deployment in flood prone areas of Zones to attend the emergency needs for the North East Monsoon -2021.
2. To accord administrative sanction separately for the value mentioned in the column (5) of the table for each zone for hiring of required number of Tata Ace vehicles on need basis mentioned in the above table of respective Zones I to XV for the period of November 2021 and December 2021.
3. To call for tender separately for each Zone as mentioned above at Zonal level by respective Zones as per Tender Transparency Act.
4. To ask each Zone to execute the above work and settle the bills from the Zonal fund.
5. To meet out the above expenditure under the budget head 230-80-04-00 Hire Chargers of the respective Zones by allocation of additional funds from FM unit.

Sl.No.1 to 5 above, orders of the Special Officer- Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council are requested.

**Deputy Commissioner (Revenue & Finance) remarks dated.08.11.2021 as follows:**

**“Numbers already hired to be reduced from these”**

**Principal Secretary/Commissioner’s remarks dated.09.11.2021 as follows:**

**“In total, only 1 per unit is permitted”**

Principal Secretary/Commissioner’s Note dated.09.11.2021 is read.

**“With Principal Secretary/Commissioner’s remarks, Sl.No. 1 to 5 are approved by Special Officer-Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council.”**

******

சுது நக எண்.பி2/5176/2021

**தீர்மான எண். 831/2021** **நாள்:10-11-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - கொரோனா நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் டெங்கு போன்ற இதர தொற்றுநோய் பணிகள் மேற்கொள்ளவும் - பயிற்சி பெற்ற 200 சுகாதார ஆய்வாளர்களை ஒருவருக்கு மாதத்திற்கு ரூ. 25,000/- வீதம் (மாத ஊதியம் ரூ. 20,000/- மற்றும் தங்குமிடம், உணவு படியாக ரூ.5,000/-) ஊதியத்தில் ஆறுமாத காலத்திற்கு பணியமர்த்த குறுகிய கால மின்னனு ஒப்பம் கோரப்பட்டது - இதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. Monisha Security Agency மற்றும் M/s. Green Agro Environment Services, நிறுவனங்களுக்கு தலா 55 சுகாதார ஆய்வாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த பணியாணை வழங்க அனுமதி.**

சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண்.747/2021 நாள்.27.09.2021ன்படி பொது சுகாதாரத்துறைக்கு தேவையான 110 எண்ணிக்கையிலான சுகாதார ஆய்வாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஆறுமாத காலத்திற்கு பணியமர்த்த குறுகியகால மின்னனு ஒப்பம் (E-Tender) 28.09.2021-ல் கோரப்பட்டது. 07.10.2021 அன்று ஆவணம் திறக்கப்பட்டதில் அதில் 7 ஒப்பந்ததாரர்கள் ஒப்பப்புள்ளி அளித்திருந்தனர்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | தொழில்நுட்ப ஒப்பத்தில் (Technical Bid) கோரப்பட்ட ஆவணங்கள் அளிக்கப்ட்டுள்ள விவரம். | பரிந்துரை |
|---|---|---|---|
| 1 | M/s. Monisha Security Agency No.619, TH Road, Tondaiarpet Chennai-600081 | ஆவணங்கள் அளிக்கப்பட்டுள்ளது. | ஒப்பம் ஏற்கப்பட்டது |
| 2 | M/s.Green Agro Environment Services, No.6, 66, Thandalam Nagar, Busstand, Lendathur Road, Thandalam, Maduranthakam, Chengalpattu-603306 | ஆவணங்கள் அளிக்கப்பட்டுள்ளது. | ஒப்பம் ஏற்கப்பட்டது |
| 3 | M/s.Shri Vaikunthanaathaa, D2,Krishna Kripa Apartment, No.7/17, Raman Street, T.Nagar,Chennai-600017 | ஆவணங்கள் அளிக்கப்படவில்லை. | ஒப்பம் நிராகரிக்கப்பட்டது |
| 4 | M/s.JAY KAY TRANS, 9/11, First Floor, Valarmathi Nagar,2nd Street, Kolathur,Chennai-600099 | ஆவணங்கள் அளிக்கப்படவில்லை. | ஒப்பம் நிராகரிக்கப்பட்டது |
| 5 | M/s.Somesh Enterprises, No.47,1st Floor, Sydenhas Road, Periamet, Chennai-600003 | ஆவணங்கள் அளிக்கப்படவில்லை. | ஒப்பம் நிராகரிக்கப்பட்டது |
| 6 | M/s. Janishree Corporate Services Pvt Ltd.No.121,TTK Road, Royapettah, Chennai-14 | ஆவணங்கள் அளிக்கப்படவில்லை. | ஒப்பம் நிராகரிக்கப்பட்டது |
| 7 | M/s.Super Neat and Manpower Agency, 17-19-1,Eruthakarar Street, Thenkarai, periyakulam-625601 | ஆவணங்கள் அளிக்கப்படவில்லை. | ஒப்பம் நிராகரிக்கப்பட்டது |

இதில் வரிசை எண் 1 மற்றும் 2 ல் தெரிவிக்கப்பட்ட ஒப்பந்ததாரர்கள் மட்டுமே போதிய ஆவணம் அளித்திருந்த காரணத்தினால் அவர்களின் ஒப்பங்கள் ஏற்கப்பட்டு நிதி ஒப்பம் 11.10.2021 அன்று திறக்கப்பட்டது.

**சுது நக எண்.பி2/5176/2021**

**Rate Quoted by the Bidders for providing 110 Sanitary Inspectors**

| Sl. No | Name of the Agency | Salary per Month (Rs) | Allowance | Total | EPF (13%) (Rs) | ESI (3.25%) (Rs) | Admin Charges | GST (18%) (3+4) | Total (1+2+3+4+5) | Required Number | Total one year Rs (6x7x6) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 1 | M/s.Green Agro Environment Services,(L1) | 20000 | 5000 | 25000 | 0 | 650 | 513 | 4709 | 30872 | 110 | 20375520 |
| 2 | M/s.Monisha Security Agency (L1) | 20000 | 5000 | 25000 | 0 | 650 | 513 | 4709 | 30872 | 110 | 20375520 |

சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண்.747/2021 நாள்.27.09.2021ன்படி அலுவலக மதிப்பீடானது கீழ்க்கண்டவாறு நிர்ணம் செய்யப்பட்டுள்ளது.

**Office Workable Rate**

| Sl. No | Name of the Post | Salary per Month (Rs) | Allowance | Total | EPF (13%) (Rs) | ESI (3.25 %) (Rs) | Admin Charges | GST (18%) (3+4) | Total (1+2+3+4+5) | Required Number | Total one year Rs (6x7x6) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 1 | Sanitary Inspector | 20000 | 5000 | 25000 | 0 | 650 | 2500 | 5067 | 33217 | 110 | 21923220 |

ஒப்பந்ததாரர்கள் இருவரும் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகை ரூ.2,03,75,520/- யானது அலுவலக மதிப்பீடான ரூ.2,19,23,220/- ஒப்பிடுகையில் (-)7,06% (lower) குறைவாக உள்ளது.

சுகாதார ஆய்வாளர்கள் பணியமர்த்த கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் மாதந்தோறும் பட்டியில் பிடித்தம் செய்யப்படும் வருமான வரி சதவீதத்தினை விட (அதாவது 2%) குறைந்த ஒப்பத்தொகை அளிக்கும் ஒப்பந்ததாரரின் ஒப்பம் நிராகரிக்கப்படும் என நிதி ஒப்ப நிபந்தனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் ஒப்பந்ததாரரின் குறைந்தபட்ச நிர்வாக கட்டணம் ஒரு நபருக்கு ஒருமாதத்திற்கு ரூ. 513 ஆகும்.

| Sl.No | Name of the Agency | Salary per Month (Rs) | Allowance | Total | EPF (13%) (Rs) | ESI (3.25 %) (Rs) | Admin Charges | GST (18%) | Total Amount | Number of posts | Total 6 months Rs (6x8x6months) (Excluding GST) | TDS 2% | Admin Charge to be quoted per person/month |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 1 | Sanitary Inspector | 20000 | 5000 | 25000 | 0 | 650 | | | 25650 | 110 | 16929000 | 338580 | 513 |

மேற்கண்ட ஒப்பந்தத்தில் M/s.Monisha Security Agency மற்றும் M/s. Green Agro Environment Services நிறுவனத்தினர் L-1 ஒப்பந்ததாரராக தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இரு நிறுவனத்தினருமே குறைந்தபட்ச ஒப்பப்புள்ளியாக ரூ. 513 அளித்துள்ளனர்.

தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்த சட்டம் 1998 பிரிவு 10(5) இரண்டு ஒப்பந்ததாரர்கள் ஒரே ஒப்பந்தபுள்ளி அளித்திருக்கும்பட்சத்தில் இரண்டு ஒப்பந்தாரருக்கும் அந்த ஒப்பத்தினை சமமாக பிரித்து வழங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது,

**TAMIL NADU TRANSSPARANCY IN TENDERS ACT 1998**

**Sec 10. Evaluation and Acceptance of Tender**.

(5) In case where two or more tenders quoted the same price, the Tender Accepting Authority shall split the procurement among such tenderers taking into consideration the experience and credentials of such tenders. Where such splitting is not possible or could not be done equally, (the said authority) shall record reasons for the same.

சுது நக எண்.பி2/5176/2021

எனவே, 110 சுகாதார ஆய்வாளர்களை பணியமர்த்தும் பணியாணையினை இரண்டு ஒப்பந்ததாரர்களுக்கும் சமமாக பிரித்து வழுங்கலாம்.

மேற்கண்ட 110 சுகாதார ஆய்வாளர்களையும், 1 முதல் 15 மண்டலங்களில் காலியாக உள்ள 95 பணியிடங்களிலும், மீதமுள்ள 15 சுகாதார ஆய்வாளர்களையும் சுகாதார கட்டுப்பாட்டு அறை மற்றும் இதர பணிகளுக்கும் பணியமர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**Zone wise Sanitary Inspectors post vacancy list**

| Sno. | Zone | Sanctioned post | vacant | Contract SI to be posted |
|---|---|---|---|---|
| 1 | 1 | 14 | 7 | 7 |
| 2 | 2 | 7 | 5 | 5 |
| 3 | 3 | 12 | 4 | 4 |
| 4 | 4 | 15 | 8 | 8 |
| 5 | 5 | 15 | 8 | 8 |
| 6 | 6 | 15 | 8 | 8 |
| 7 | 7 | 15 | 8 | 8 |
| 8 | 8 | 15 | 7 | 7 |
| 9 | 9 | 18 | 8 | 8 |
| 10 | 10 | 16 | 8 | 8 |
| 11 | 11 | 13 | 4 | 4 |
| 12 | 12 | 12 | 6 | 6 |
| 13 | 13 | 13 | 6 | 6 |
| 14 | 14 | 11 | 5 | 5 |
| 15 | 15 | 9 | 3 | 3 |
| | | 200 | 95 | |
| | Health Control Room, Birth and Death sec and other activities | | | 15 |

எனவே, 1 முதல் 8 மண்டலங்களில் தேவைப்படும் 55 சுகாதார ஆய்வாளர்களையும் M/s.Monisha Security Agency நிறுவனம் மூலம் பணியமர்த்தலாம்.

மண்டலம் 9 முதல் 15 வரை மற்றும் சுகாதார கட்டுப்பாட்டு அறை மற்றும் இதர பணிகளுக்கும் தேவையன 55 சுகாதார ஆய்வாளர்களையும் M/s. Green Agro Environment Services நிறுவனத்தின் மூலம் பணியமர்த்தலாம்.

| Sl. No | Name of the Agency | Salary per Month (Rs) | Allowance | Total | EPF (13%) (Rs) | ESI (3.25 %) (Rs) | Admin Charges | GST (18%) (3+4) | Total (1+2+3+4+5) | Required Number | Total six months Rs (6x7x6M) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 1 | M/s. Green Agro Environment Services,(L1) | 20000 | 5000 | 25000 | 0 | 650 | 513 | 4709 | 30872 | 55 | 10187760 |
| 2 | M/s. Monisha Security Agency (L1) | 20000 | 5000 | 25000 | 0 | 650 | 513 | 4709 | 30872 | 55 | 10187760 |

எனவே இப்பணியின் அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டு ஒப்ப கூர்ந்தாய்வு குழு 11.10.2021 அன்று கூடி "மேற்கண்ட ஒப்பந்தத்தில் M/s.Monisha Security Agency மற்றும் M/s. Green Agro Environment Services நிறுவனத்தினர் L-1 ஒப்பந்ததாரராக தேர்வு செய்யப்பட்டு,. இரு நிறுவனத்தினருமே குறைந்தபட்ச ஒப்பப்புள்ளியாக ரூ.513 அளித்துள்ள நிலையில் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்த சட்டம் 1998 பிரிவு 10(5) இரண்டு ஒப்பந்ததாரர்கள் ஒரே ஒப்பந்தபுள்ளி அளித்திருக்கும்பட்சத்தில் இரண்டு ஒப்பந்தாரருக்கும் அந்த ஒப்பத்தினை சமமாக பிரித்து வழங்க வேண்டும் என்ற விதியின்படி 110 துப்புரவு ஆய்வாளர்களை பணியமர்த்தும் பணியாணையினை இரண்டு ஒப்பந்ததாரர்களுக்கும் சமமாக பிரித்து ஒப்பந்தகூர்ந்தாய்வு குழு வழங்க பரிந்துரை செய்துள்ளது. முதன்மை செயலர் ஆணையர் அவர்களின் 29.10.2021 நாளிட்ட ஆணையின்படியும் மேற்கண்டவாறு ஒப்பந்தத்தினை சமமாக இரண்டு ஒப்பந்தாரருக்கும் பிரித்து வழங்க ஆணை பெறப்பட்டுள்ளது.

சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண்.747/2021 நாள்.27.09.2021ல், மேற்கண்ட சுகாதார ஆய்வாளர்கள் பணியமர்த்துவதற்கான செலவினத்தினை மாநகராட்சி நிதி பிரிவு குறியீடு 30-31-01 கணக்கு குறியீடு 230-15-09-00 என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது. இப்பணியானது கோவிட் 19 தடுப்புபணி என்பதால் இந்த செலவினத்தினை சென்னை மாநகராட்சி கோவிட் நிதியின் கீழ் பிரிவு குறியீடு 30-31-01 கணக்கு குறியீடு 230-70-12-03 என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை, கொரோனா நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் டெங்கு போன்ற இதர தொற்றுநோய் பணிகள் மேற்கொள்ளவும், பயிற்சி பெற்ற 200 சுகாதார ஆய்வாளர்களை ஒருவருக்கு மாதத்திற்கு ரூ.25,000/- வீதம் (மாத ஊதியம் ரூ. 20,000/- மற்றும் தங்குமிடம், உணவு படியாக ரூ.5,000/-) ஊதியத்தில் ஆறு மாத காலத்திற்கு பணியமர்த்த மின்னணு ஒப்பம் கோரியதில், தேர்வு செய்யப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களும், ஒரே குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள காரணத்தினால் M/s.Monisha Security Agency (L1) நிறுவனத்தின் மூலமாக 1 முதல் 8 வரையிலான மண்டலங்களில் 55 சுகாதார ஆய்வாளர்கள் 12.10.2021 முதல் ஆறு மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்திடும் பணிக்கு ஒப்பத்தொகை ரூ.1,01,87,760/- (ரூபாய் ஒரு கோடியே ஒரு லட்சத்து எண்பத்தி ஏழாயிரத்து எழுநூற்றி அறுபது மட்டும்)க்கு பணியாணை வழங்கவும் மற்றும் M/s.Green Agro Environment Services நிறுவனத்தின் மூலமாக 9 முதல் 15 வரையிலான மண்டலங்கள் மற்றும் சுகாதார கட்டுப்பாட்டு அறைக்கென 55 சுகாதார ஆய்வாளர்கள் 12.10.2021 முதல் ஆறு மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்திடும் பணிக்கு ஒப்பத்தொகை ரூ.1,01,87,760/- (ரூபாய் ஒரு கோடியே ஒரு லட்சத்து எண்பத்தி ஏழாயிரத்து எழுநூற்றி அறுபது மட்டும்)க்கு பணியாணை வழங்க அனுமதிக்கும்,
2. மேற்கண்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்த தொகையில் 2% பிணை வைப்பு தொகையாக பெறவும் மற்றும் ஒப்பந்தம் செய்ய அனுமதிக்கும்,
3. இதற்கான செலவினம் சென்னை மாநகராட்சி கோவிட் நிதியின் கீழ் பிரிவு குறியீடு 30-31-01 கணக்கு குறியீடு 230-70-12-03 என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும், பணி முடிந்து பட்டி தீர்வு செய்ய அனுமதிக்கும்,
4. ஒப்பந்தத்தில் நிராகரிக்கப்பட்ட ஒப்பந்ததாரரின் முன்வைப்பு தொகையினை சம்பந்தபட்ட நிறுவனங்களுக்கு திரும்ப வழங்க அனுமதிக்கும்,

மேற்கண்ட *1* முதல் *4* வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 10.11.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"*1* முதல் *4* வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

* * * * * *

**அ.து.ந.க.எண்.அ3/453/2021**

**தீர்மான எண். 826/2021** **நாள்:13-11-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - ஒப்பம் - அரங்கத்துறை - மண்டலம்-9, வார்டு-126, South Canal Bank Road (Alphonsa Ground) உள்ள மேஜை பந்து (5 மேஜை) விளையாட்டு அரங்கினை ஒருங்கிணைந்த முறையில் ஐந்து வருடங்கள் நிர்வகித்தல் மற்றும் பராமரித்து மேம்படுத்தும் பணிக்கு வரையறுக்கப்பட்ட ஒப்பம் கோரப்பட்டது - அதிக ஒப்ப விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் M/s.ATHA TRUST அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி.**

சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் தீர்மான எண்.572/2021, நாள்.25.07.2021ன்படி, மண்டலம்-9, வார்டு-126, South Canal Bank Road (Alphonsa Ground) உள்ள மேஜை பந்து (5 மேஜை) அரங்கில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வருவாய் தரும் வகையில் ஒருங்கிணைந்த முறையில் 5 வருடங்கள் நிர்வகித்தல் மற்றும் பராமரித்து மேம்படுத்தும் பணிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

இதன்படி மேற்கண்ட அரங்கினை ஐந்து வருடங்களுக்கு வருவாய் பகிர்வு முறையில் (Revenue Sharing Model) நிர்வகித்தல் மற்றும் பராமரித்து மேம்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட உள்ளன. அதன்படி இணையதள வாயிலாக வரையறுக்கப்பட்ட ஒப்பம் கோரப்பட்டது.

மேற்கண்டவாறு கோரப்பட்ட ஒப்பங்களில், கோரப்பட்ட ஒப்ப இறுதி நாளான 27.09.2021 அன்று 4 ஒப்பங்கள் e-tender மூலமாக பெறப்பட்டன. இதில், விலைப்புள்ளி அளித்தவர்களின் விவரம் பின்வருமாறு,

| வ. எண் | அதிக விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் பெயர் திரு/ திருவாளர்கள்/ திருமதி | பணியின் அலுவலக குறைந்த பட்ச ஒதுக்கீட்டு தொகை (Minimum Reserve Price) (முதல் ஆண்டிற்கு) ரூ. | ஒப்பந்ததாரர் அளித்த அதிகபட்ச தொகை (முதல் ஆண்டிற்கு) ரூ. | ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப தொகையின் அடிப்படையில் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | M/S. My Blue Sports Club | 1,20,000.00 | 1,33,200 | (+)11.00% அதிகம் |
| 2. | Tabl e Tennis Academy, Kozhikode | 1,20,000.00 | 1,33,200 | (+)11.00% அதிகம் |
| 3. | Vision Sports | 1,20,000.00 | 1,38,000 | (+)15.00% அதிகம் |
| 4. | Atha Trust | 1,20,000.00 | 1,50,000 | (+)25.00% அதிகம் |

மேற்கண்ட பணி, பெருநகர சென்னை மாநகராட்சியின் வருவாய் என்பதால் இப்பணிக்கு அதிக ஒப்பத்தொகை வழங்கிய ஒப்பந்ததாரர்களை தேர்வு செய்யவேண்டும். அதன்படி, மண்டலம்-9, வார்டு-126ல் South Canal Bank Road ( Alphonsa Ground) உள்ள மேஜை பந்து (5 மேஜை) அரங்கினை ஒருங்கிணைந்த முறையில் 5 வருடங்கள் நிர்வகித்தல் மற்றும் பராமரித்து மேம்படுத்தும் பணிக்கு M/s. ATHA TRUST அவர்கள் ஒப்பத்தொகையாக முதல் ஆண்டிற்கு ரூ.1,50,000/- வழங்கியுள்ளார்கள். இது பணியின் அலுவலக குறைந்த பட்ச ஒதுக்கீட்டு தொகையான ரூ.1,20,000/- உடன் ஒப்பிடுகையில் ரூ.30,000/- கூடுதலாக உள்ளது. மேலும், விலை உயர்வுக்காக ஒப்பந்ததாரரை 05/10/2021 அன்று பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்பட்டதில், ஒப்பந்ததாரர் ஏற்கனவே வழங்கிய தொகைக்கு மேல் கூடுதலாக தொகை ஏதும் வழங்க இயலாது என கடிதம் வழங்கியுள்ளார்கள்.

| ஒப்பந்தாரரின் இறுதி ஒப்பத் தொகை முதல் ஆண்டிற்கு திரு/ திருவாளர்கள்/ திருமதி | பணியின் அலுவலக குறைந்த பட்ச ஒதுக்கீட்டு தொகை (Minimum Reserve Price) (முதல் ஆண்டிற்கு) ரூ. | ஒப்பந்ததாரர் அளித்த அதிகபட்ச இறுதி ஒப்பத் தொகை தொகை (முதல் ஆண்டிற்கு) ரூ. | ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப தொகையின் அடிப்படையில் இறுதி ஒப்பத் சதவீதம் |
|---|---|---|---|
| Atha Trust | 1,20,000.00 | 1,50,000 | (+)25.00% அதிகம் |

**அ.து.ந.க.எண்.அ3/453/2021**

மேலும், மேற்கண்ட அரங்கினை பராமரிக்க ஒப்பப்படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் விதிமுறைகளை உட்பட்டு, இப்பணியினை வழங்கலாம் என கருதப்படுகிறது.

1. இப்பணியை சம்மந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்களின் அறிவுறுத்தலின்படி செயல்படுத்தவேண்டும்.
2. திரும்ப அளிக்கும்போது எங்கெங்கு எந்த நிலையில் உள்ளதோ அவைகளை அந்தந்த நிலையிலேயே திரும்ப அளிக்கப்பட வேண்டும்.
3. பணி ஆணை கிடைக்கப்பெற்றவுடன் இவ்அரங்கினை 90 நாட்களுக்குள் SDAT விதிகளின்படி தரத்தினை உயர்த்தி சரி செய்யப்படவேண்டும்.
4. ஒப்பத்தொகை ரூ.1,50,000/--லிருந்து ஒவ்வொரு ஆண்டும் 5% கூட்டு சதவீத முறையில் செலுத்த வேண்டும். மேற்கண்ட 5 ஆண்டுகளுக்கு மாநகராட்சி நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒவ்வொரு ஆண்டிற்கான ஒப்பத்தொகையினை ஆண்டு தொடக்கத்திற்கு முன்னதாகவே ஆணையர், சென்னை மாநகராட்சி என்கிற பெயரில் வரைவோலையாக 130-10-05-00 என்ற தலைப்பில் செலுத்த வேண்டும்.

| ஆண்டு | ஒப்பத்தொகை மற்றும் கூட்டு சதவீத தொகை 5% | கூட்டு சதவீத தொகை (அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு) | செலுத்த வேண்டிய தொகை (அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு) |
|---|---|---|---|
| முதலாம் ஆண்டு | ரூ. 1,50,000/- | -- | ரூ. 1.50,000/- |
| இரண்டாம் ஆண்டு | ரூ. 1,50,000 X 5% | ரூ.7,500/- | ரூ. 1,57,500/- |
| மூன்றாம் ஆண்டு | ரூ. 1,57,500 X 5% | ரூ. 7,875/- | ரூ. 1,65,375/- |
| நான்காம் ஆண்டு | ரூ. 1,65,375 X 5% | ரூ. 8269/- | ரூ. 1,73,644/- |
| ஐந்தாம் ஆண்டு | ரூ. 1,73,644 X 5% | ரூ. 8682/- | ரூ. 1,82,326/- |

5. மேற்கண்ட ஒப்பத்தொகையை ஆண்டு தொடக்கத்திற்கு முன்னதாகவே (பணி ஆணை நாள்) செலுத்தவேண்டும். அவ்வாறு செலுத்த தவறினால் அந்த ஆண்டிற்கான ஒப்பத்தொகையுடன் 12% கூடுதல் தொகையாக 2 மாதங்களுக்குள் செலுத்த வேண்டும். தவறும்பட்சத்தில் மாநகராட்சி எவ்வித முன்னறிப்பின்றி மேற்கண்ட திடலை திரும்ப எடுத்து கொள்ளும்.
6. இந்த ஒப்பந்தம் முதல் ஐந்து ஆண்டுகளுக்கு செல்லத்தக்கது ஆகும்.
7. மேற்கண்ட Table Tennis கோர்ட்டை காலை 6.00 மணி முதல் 10.00 மணி வரை மற்றும் மாலை 3.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்படவேண்டும்.
8. ஒரு நபருக்கு ஒரு மாதத்திற்கு ரூ.1,000/- என கட்டணம் வசூலிக்கவேண்டும்.
9. தினமும் ஒரு மணி நேரம் பெண்களுக்கென ஒதுக்கப்பட வேண்டும். தினமும் காலை 7.00 மணி முதல் 8.00 மணி, மாலை 4.00 மணி முதல் 5.00 மணி வரை இலவசமாக Corporation Staff's and their children and the Corporation School Students வழங்க வேண்டும்.
10. சென்னை பள்ளி மாணவ மாணவியர்கள், மாநகராட்சி அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் அவர்களின் குழந்தைகளுக்கு அவர்களின் அடையாள அட்டையின் அடிப்படையில் இலவசமாக விளையாட அனுமதிக்கப்பட வேண்டும்.
11. விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் நாட்கள் தவிர அனைத்து நாட்களிலும் காலை 6.00 மணி முதல் 10.00 மணி வரை மற்றும் மாலை 3.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை பொதுமக்கள் விளையாட அனுமதிக்கப்பட வேண்டும்.
12. பணி ஆணை வழங்கப்பட்ட நாளிலிருந்து டேபிள் டென்னிஸ் கோர்ட் திடலின் மேம்பாட்டுப் பணிகள், பராமரிப்பு பணிகள், மின் கட்டணம் உள்ளிட்டவைகள் அனைத்து செலவினங்களும் ஒப்பந்ததாரரையே சாரும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

13. மேற்கண்ட திடலின் சம்மந்தமாக எந்த தகவல்களையும், குறைகளையும் சம்மந்தப்பட்ட மண்டல அலுவலர் / செயற்பொறியாளர் அவர்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.
14. விலங்குகள் கண்டிப்பாக உள்ளே அனுமதிக்கக் கூடாது.
15. மது மற்றும் இதர போதை பொருட்களையும் திடல் வளாகத்திற்குள் விற்பனை செய்தல் மற்றும் உபயோகப்படுத்துதல் கூடாது.
16. வயது முதிர்ந்தோருக்கும் குழந்தைகளுக்கும் சிறப்பு பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும்.
17. திடலுக்கு வருபவர்கள் மற்றும் பழகுநர்களுக்கு பாதுகாப்பு குறித்த எச்சரிக்கை பலகை உள்ளேயும் வெளியேயும் வைக்கப்பட வேண்டும்.
18. திடலுக்கு உள்ளேயும் வெளியேயும் சட்டத்திற்கு புறம்பான எந்த செயலையும் செய்யக் கூடாது.
19. பணி ஆணை பெறப்பட்ட 15 நாட்களுக்குள் திடலில் பணிபுரியும் மேலாளர், வரவேற்பாளர், பயிற்சியாளர், உயிர் காப்பாளர், பிளான்ட் ஆப்ரேட்டர், மின் பணியாளர், துப்புரவு பணியாளர் மற்றும் காவலர் ஆகியோர்களின் விவரங்களை சம்மந்தப்பட்ட மண்டல அலுவலர் / செயற்பொறியாளர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறே திடலின் ஒட்டுமொத்த பொறுப்பாளர் குறித்த விவரத்தையும் தெரிவிக்க வேண்டும்.
20. பணி ஆணை கிடைக்கப் பெற்ற நாள் முதல் திடலின் எந்த ஒரு பராமரிப்பு மேம்பாடு மற்றும் இழப்பீட்டிற்கும் பெருநகர சென்னை மாநகராட்சி பொறுப்பாகாது.
21. பெருநகர சென்னை மாநகராட்சி நிபந்தனைகள் மற்றும் விதிகளை மீறினால் அல்லது துறைக்கு இப்பணிகள் திருப்திகரமாக இல்லை என்றாலோ ஒரு நாளைக்கு ரூ.500/- அபராதமாக வசூலிக்கப்படும். இதே நிலை 15 நாட்களுக்கு மேல் நீடித்தால் மாநகராட்சி எவ்விதமுன்னறிப்பின்றி மேற்கண்ட திடலை திரும்ப எடுத்து கொள்ளும்.
22. மேற்கண்ட திடலை மாநகராட்சிக்கு தேவைப்படும் சமயத்தில், அறிவிப்பு செய்யப்பட்டு 14 நாட்களுக்குள் ஒப்பத்தை ரத்து செய்து திரும்ப எடுத்து கொள்ளும்.
23. பணிக்காலம் முடிவடைந்த பின்னர் மேற்கண்ட திடலை நல்ல நிலையில் சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கவேண்டும் என்ற நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி வழங்கப்படும்.

எனவே,

1) மண்டலம்-9, வார்டு-126, South Canal Bank Road (Alphonsa Ground) உள்ள மேஜை பந்து (5 மேஜை) விளையாட்டு அரங்கினை ஒருங்கிணைந்த முறையில் ஐந்து வருடங்கள் நிர்வகித்தல் மற்றும் பராமரித்து மேம்படுத்தும் பணிக்கு மேற்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு, அதிக ஒப்பப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரான M/s. ATHA TRUST அவர்களுக்கு, முதல் ஆண்டிற்கான ரூ.1,50,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)-க்கான ஒப்பத்தை ஏற்று பணி ஆணை வழங்கவும்
2) கீழ்க்கண்ட அட்டவணையின்படி ஐந்து ஆண்டுகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு 5% கூட்டு சதவீத முறையில் ஒப்பந்ததாரரிடமிருந்து தொகையினை பெறவும்

| ஆண்டு | ஒப்பத்தொகை மற்றும் கூட்டு சதவீத தொகை 5% | கூட்டு சதவீத தொகை (அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு) | செலுத்த வேண்டிய தொகை (அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு) |
|---|---|---|---|
| முதலாம் ஆண்டு | ரூ. 1,50,000/- | -- | ரூ. 1,50,000/- |
| இரண்டாம் ஆண்டு | ரூ. 1,50,000 X 5% | ரூ.7,500/- | ரூ. 1,57,500/- |
| மூன்றாம் ஆண்டு | ரூ. 1,57,500 X 5% | ரூ. 7,875/- | ரூ. 1,65,375/- |
| நான்காம் ஆண்டு | ரூ. 1,65,375 X 5% | ரூ. 8269/- | ரூ. 1,73,644/- |
| ஐந்தாம் ஆண்டு | ரூ. 1,73,644 X 5% | ரூ. 8682/- | ரூ. 1,82,326/- |

<u>அ.து.ந.க.எண்.அ3/453/2021</u>

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 04.11.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**பே.சா.து.ந.க.எண்- பி3/3916/2021**

**தீர்மான எண். 827/2021** **நாள்:13-11-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பேருந்து சாலைகள் துறை - உட்புற சாலைகளில் ஒட்டுப்பணி மேற்கொள்ளுதல், நடைபாதைகள் பழுதுபார்த்தல், சாலை மையத் தடுப்பு சீரமைத்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் - நிர்வாக அனுமதி மற்றும் ஒப்பம் கோர அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் 5270.36 கி.மீட்டர் நீளமுடைய 34,640 உட்புற சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இவற்றில் 3932.13 கி.மீ நீளமுடைய 23,221 எண்ணிக்கையிலான தார் சாலைகளும் 1270.83 கி.மீ நீளமுடைய 11039 எண்ணிக்கையிலான சிமெண்ட் கான்கிரீட் சாலைகளாகும்.

பெருநகர சென்னை மாநகராட்சி சாலைகள், தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (TURIP), சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் (CMCDM) மற்றும் பல்வேறு திட்டங்களின் கீழ் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் பெரும்பாலான சாலைகள் மேம்படுத்தப்பட்டு மூன்றாண்டுகள் நிறைவுற்றும், நல்ல நிலையில் உள்ளது. இருப்பினும் சேவைத்துறைகளின் குடிநீர் (ம) கழிவுநீர் மற்றும் மின்சார இணைப்பு மற்றும் பழுது பார்க்கும் பணிக்காகவும் சாலைகள் அவ்வப்போது பல இடங்களில் வெட்டப்படுகிறது. மேலும் OFC நிறுவனங்களால் கேபிள் பதிக்கும் பணிக்காகவும் அனுமதி வழங்கப்பட்டு சாலை வெட்டுக்கள் மேற்கொள்ளப்பட்டு செப்பனிடப்பட்டு வரப்படுகிறது. இவ்வாறு அரசு சேவைத்துறைகள் மற்றும் OFC நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட சாலை வெட்டுகளாலும் மழை மற்றும் இயற்கை சீற்றங்களால் சாலைகளில் ஏற்படும் சிறு பள்ளங்களாலும் (Pot holes) சாலைகள் சேதமடைகின்றன. எனவே சாலைகளில் வாகனங்கள் எவ்வித தடையுமின்றி சீராக செல்லவும் மற்றும் விபத்துக்கள் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டும் பொது மக்களின் நலனை முன்னிட்டு சேதமடைந்த உட்புற சாலைகளை உடனுக்குடன் ஒட்டுப் பணி மூலம் சீரமைக்க வேண்டியது அவசியம் ஆகிறது.

மேலும், உட்புற சாலைகளில் வேகத்தடை அமைப்பது, மங்கிபோன தெர்மோபிளாஸ்டிக் கோடுகள் புதுப்பித்தல், வழிகாட்டு பலகைகள் (Sign Boards) அமைப்பது போன்ற போக்குவரத்து அபிவிருத்தி பணிகள் தேவைக்கேற்ப அவ்வப்போது மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதன் முக்கிய கூறுகள் வருமாறு.

1) பெருநகர சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் குழாய் உடைப்பினால் ஏற்படும் சாலை சேதத்தை உடனடியாக செப்பனிட வேண்டிய உட்புற சாலை ஒட்டுபணி மேற்கொள்ளுதல்.
2) தமிழ்நாடு மின்சார வாரியம் Cable Burst விபத்துகளினால் சேதமடையும் கேபிள் இணைப்புக்காக தோண்டப்படும் சாலையில் உடனடியாக சீரமைப்பதற்கான சாலைப் பணி.
3) மிக முக்கிய பிரமுகர் வருகையை முன்னிட்டு அவர்கள் செல்லும் வழிதடங்களில் செய்ய வேண்டிய சிறு சிறு பராமரிப்பு பணிகள்.

எனவே, மேற்குறிப்பிட்ட அனைத்து முக்கிய காரண காரியங்களுக்காகவும், பொதுமக்கள் நலனை முன்னிட்டும் உட்புற சாலைகளில் ஒட்டுபணிகள் மேற்கொள்ளவும், மேம்பாட்டு பணிகள் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், மேலும் ஒவ்வொரு மண்டலத்திற்கு ஒப்பந்ததாரர்கள் நியமித்து ஒரு வருட காலத்திற்கு அவ்வப்போது தேவைக்கேற்ப 2021 – 22 அலுவலக விலைவிபர பட்டியல் அடிப்படையில் மதிப்பீடுகள் தயாரித்து உரிய அலுவலரிடம் நிர்வாக அனுமதி பெற்று சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளலாம் என கருதப்படுகிறது. அதன் விவரம் பின்வருமாறு.

**ரூ. இலட்சத்தில்**

| வ. எண் | மண்டலம் | உட்புற சாலை ஒட்டு பணி மற்றும் பராமரிப்பு பணி தேவைப்படும் தொகை | 9சாலை மையத் தடுப்பு மற்றும் போக்குவரத்து மேம்பாட்டு பணிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | I | 25.00 | 4.00 | 29.00 |
| 2 | II | 18.50 | 3.00 | 21.50 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | III | 44.00 | 7.50 | 51.50 |
| 4 | IV | 43.00 | 7.00 | 50.00 |
| 5 | V | 34.00 | 6.00 | 40.00 |
| 6 | VI | 43.00 | 7.00 | 50.00 |
| 7 | VII | 54.00 | 9.00 | 63.00 |
| 8 | VIII | 51.00 | 9.00 | 60.00 |
| 9 | IX | 51.00 | 9.00 | 60.00 |
| 10 | X | 58.00 | 10.00 | 68.00 |
| 11 | XI | 45.50 | 7.50 | 53.00 |
| 12 | XII | 25.00 | 4.00 | 29.00 |
| 13 | XIII | 68.00 | 10.00 | 78.00 |
| 14 | XIV | 45.50 | 7.50 | 53.00 |
| 15 | XV | 46.00 | 8.00 | 54.00 |
| **மொத்தம்** | | **651.50** | **108.50** | **760.00** |

எனவே, உட்புற சாலைகளில் ஒட்டுப்பணி, பழுதுபார்ப்பு மற்றும் பராமரிக்கும் பணி மேற்கொள்வதற்கு,

1. மண்டலம் 1 முதல் 15 வரையிலுள்ள உட்புற சாலைகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள அட்டவணையில் கண்டுள்ளபடி நிர்வாக அனுமதியும் ஒப்பப் புள்ளிகள் கோர அனுமதியும்,
2. அவ்வப்போது ஏற்படும் பழுதுகளுக்கேற்ப மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு உரிய அலுவலர்களின் அனுமதி பெற்று பணி மேற்கொண்டு, பட்டி தீர்வு செய்யவும்,
3. இப்பணிகளுக்கான செலவின தொகையினை பேருந்து சாலைகள் துறை மூலதன நிதியின் கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 04.11.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**ம.அ.8. சு.து.ந.க.எண்.எச்1/1411/2021**

**தீர்மான எண். 828/2021** **நாள்:13-11-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 8 - பகுதி-21, 22 மற்றும் 23ற்கு உட்பட்ட கோட்டம்-94 முதல் 108 வரை தெருக்களில் சுற்றித் திரியும் மாடுகளை பிடிப்பதற்கு 4 தற்காலிக பணியாளர்களை ஒரு வருட காலத்திற்கு (22.10.2021 முதல் 21.10.2022 வரை) தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் பணியமர்த்த அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-8 க்கு பகுதி-21, 22 மற்றும் 23ற்கு உட்பட்ட கோட்டம்-94 முதல் 108 வரையில் உள்ள கோட்டங்களில், தெருக்களில் சுற்றித் திரியும் மாடுகளை பிடிப்பதற்கு தினக்கூலி அடிப்படையில் 22.10.2021 முதல் 21.10.2022 வரை ஒரு வருட காலத்திற்கு தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் 4 தற்காலிக பணியாளர்களை பணியமர்த்தி மாடுகளை பிடிக்கும் பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

1. மண்டலம்-8ற்கு உட்பட்ட கோட்டம் – 94 முதல் 108 வரை தெருக்களில் சுற்றித் திரியும் மாடுகளை பிடிக்கும் பணிக்காக 4 பணியாளர்களை 22.10.2021 முதல் 21.10.2022 வரை ஒரு வருட காலத்திற்கு தற்காலிகமாக பணியமர்த்தவும்,
2. ஒரு வருட காலத்திற்கு 22.10.2021 முதல் 21.10.2022 வரை பணியமர்த்தி ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு ரூ.410/-வீதம், ஒரு வருட காலத்திங்கு 4 பணியாளர்களுக்கு ரூ.410X4X365=ரூ.5,98,600/- (ரூபாய் ஐந்து இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து அறுநூறு மட்டும் ) ஐ செலவினம் மேற்கொள்ளவும்,
3. இப்பணிக்கான செலவினத்தை மேற்கொள்ள கணக்கு குறியீட்டு எண்.30-32-02, கணக்கு தலைப்பு எண்.210-10-06-02 என்ற தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்து வழங்க நிர்வாக அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 04.11.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*** * * * * ***

**ம.அ.10.வ.து.ந.க.எண்.ஆர்4/2788/2021**

**தீர்மான எண். 829/2021** **நாள்:13-11-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 10, கோட்டம் - 131 , 80 அடி சாலை - சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் புதியதாக சமூக நல கூடம் கட்டப்பட்டுள்ளது - சமூக நல கூடத்தினை பொது மக்கள் பயன்பாட்டிற்கு அனுமதித்து வாடகை நிர்ணயம் செய்யஅனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி , மண்டலம் – 10 , கோட்டம் – 131 , பகுதி - 28 , 80 அடி சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் நிதியின்கீழ் சமுதாய நல கூடம் இரண்டாம் தளம் கட்டி பொது மக்கள் சுப நிகழ்ச்சிகள் நடத்தும் பயன்பாட்டிற்கு வர வேண்டி உள்ளது . இச்சமுதாய நல கூடம் தரைதளம் 2450 ச.அடி , முதல் தளம் 2750 ச.அடி , இரண்டாம் தளம் 2750 ச.அடி ஆக மொத்தம் 7950 சதுரடிகள் ஆகும் .

வரி மதிப்பீட்டாளர், கோட்டம்-131 அவர்களின் 31.08.2021 கள ஆய்வு அறிக்கையில் மேற்கண்ட சமுதாய நல கூடம் தரை தளத்தில் 381 ச.அடியில் ரேஷன் கடை, 154 ச.அடியில் அலுவலக அறை, 170 ச . அடியில் கழிவறை மற்றும் 132 ச . அடியில் மின்சாரம் அறை கட்டப்பட்டுள்ளது. முதல் தளத்தில் மணமகன் அறை மற்றும் மணமகள் அறை தலா 235 ச.அடியில் உள்ளது . பொது மக்கள் அமரும் இருக்கைகளின் எண்ணிக்கை 200 ஆகும் . இரண்டாவது தளத்தில் 2546 ச.அடியில் உணவருந்தும் கூடம் ஓடு வேயப்பட்ட நிலையில் உள்ளது என இக்கோட்ட வரி மதிப்பீட்டாளர் அவர்கள் அறிக்கை சமர்ப்பித்துள்ளார் என்ற விவரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது .

மேற்காணும் சமுதாய நலக்கூடம் தரைதளம் மற்றும் முதல் தளம் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியிலிருந்தும், இரண்டாம் தளம் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்தும் கட்டப்பட்டுள்ளது . மேற்கூறப்பட்ட சமுதாய நல கூடத்தில் தண்ணீர் வசதி, மின்சார வசதி , குளியல் அறை மற்றும் கழிவறை ஆகிய வசதிகள் மட்டுமே செய்யப்பட்டுள்ளது .

மேற்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் கட்டப்பட்டுள்ள குடியிருப்பு அல்லாத கட்டிடத்திற்கு ஒரு சதுர அடிக்கு ரூ. 4.10/- (GRS) என சென்னை மாநகராட்சி சொத்து வரி விதிப்பில் ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது . எனவே , கோட்டம் – 131 , பகுதி – 28 , 80 அடி சாலை சென்னை – 600 078ல் புதியதாக கட்டப்பட்டுள்ள சமுதாய நலக்கூடத்திற்கு இந்த மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு கீழ்கண்டவாறு வாடகை நிர்ணயம் செய்யப்படுகிறது .

**கணக்கீட்டுத்தாள்**

**கட்டிடத்தின் விவரம்**

| | |
|---|---|
| தரை தளம் | 2450 ச . அடி |
| முதல் தளம் | 2750 ச . அடி |
| இரண்டாம் தளம் | 2750 ச . அடி |
| மொத்தம் | 7950 ச . அடி |

கட்டிடத்தின் மொத்த சதுரடி 7950 ச . அடி X 4 . 10 X 12 = ரூ . 9778 . 50 (அ) ரூ . 10000/ -

ஆண்டுக்கு 40 நிகழ்ச்சிகள்

ஒரு நாள் வாடகை ரூ .10000 /- (சேவை வரி தனியே)

அரைநாள் வாடகை ரூ . 5000 / - (சேவை வரி தனியே)

மேற்கண்டவாறு கணக்கிட்டுள்ள வாடகை ரூ.10000/-, அரைநாள் வாடகை ரூ. 5000/- எனவும் (இச்சமுதாய நலக்கூடத்தில் நடத்தப்படும் சுப நிகழ்ச்சிகளுக்கு வாடகை மட்டுமே பொருந்தும்) மற்ற நிகழ்ச்சிக்காக பயன்படுத்தப்படும் மின்சாரக் கட்டணம் கணக்கிட்டு, நிகழ்ச்சி நடத்துபவர்களிடம் தனியே வசூலிக்கப்படும். மேலும், தற்போது நடைமுறையிலுள்ள G.S.T. தொகை வாடகை தொகையுடன் சேர்த்து வசூலிக்கப்படும். சமுதாய நல கூடத்தில் செய்யப்பட்டுள்ள வசதிகளை பொறுத்து இந்த முன் வைப்புத் தொகையை ரூ.20,000/- வரை

நிர்ணயம் செய்யலாம். இந்த இடம் சென்னையின் பிரதான பகுதியான கே.கே. நகர் பி. வி. இராஜ மன்னார் சாலை மற்றும் சாலி கிராமம் 80 அடி சாலை சந்திப்பில் அமையப் பெற்றுள்ளது.

**நிபந்தனைகள்**

1. சமுதாய நலக்கூடத்தினை வாடகைக்கு ஒதுக்கீடு பெறும் விண்ணப்பதாரர், அதன் அசல் ஆணையுடன் நிகழ்ச்சி நடைபெறும் நாள் அன்று சம்மந்தப்பட்ட கோட்டம்-131 அலுவலகத்தினை அணுகி, சமுதாய நலக்கூடத்தின் சாவியினை பெற்றுக் கொள்ள வேண்டும். நிகழ்ச்சி முடிந்ததும் சமுதாய நலக்கூடத்தின் பொருட்களைத் தவிர, மற்ற அனைத்து பொருட்களும் அகற்றப்பட வேண்டும்.
2. விண்ணப்பதாரருக்கு சமுதாய நலக்கூடத்திற்கான சாவி 131, கோட்ட உதவி பொறியாளர் அலுவலகத்தினால் வழங்கப்படும்.
3. நிகழ்ச்சிக்காக பயன்படுத்தப்படும் மின்கட்டணத்திற்கான தொகையானது வைப்புத் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்பட்டு மீதமுள்ள தொகை மண்டல அலுவலகத்தினால் விண்ணப்பதாரருக்கு வழங்கப்படும். வைப்புத் தொகையைவிட கூடுதலாக மின்சாரம் பயன்படுத்தப்பட்டால், அதற்கான தொகையினை விண்ணப்பதாரர் மண்டல அலுவலகத்தில் கேட்புக் காசோலையாக செலுத்திட வேண்டும்.
4. நிகழ்ச்சியின் போது சமுதாய நலக்கூடத்திற்கு விண்ணப்பதாரரால் நடத்தப்படும் நிகழ்ச்சியால் பாதிப்பு ஏற்பட்டால் அதற்கான இழப்பீட்டுத் தொகையினை விண்ணப்பதாரர் ஏற்க வேண்டும்.
5. வாடகைக்கு ஒதுக்கீடு பெற்ற நிகழ்ச்சிக்காக மட்டுமே சமுதாய நலக்கூடத்தினை பயன்படுத்திட வேண்டும்.
6. நிபந்தனைகளை கண்காணிக்கும் பணி மற்றும் சமுதாய நலக்கூடங்களின் பராமரிப்புப் பணிகள் யாவும் தொடர்ந்து மண்டல அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படும்.
7. முன்பதிவு செய்த அதே சமுதாய நலக்கூடம், விண்ணப்பதாரர் கோரும் நாளில் வேறு நிகழ்ச்சிக்காக முன்பதிவு செய்யாமல் காலியாக இருக்கும் பட்சத்தில் மாற்று தேதியில் முன்பதிவு செய்வதற்கு ஒரு முறை மட்டும் அனுமதிக்கப்படும்.
8. வெள்ளச்சேதம், இயற்கையின் சீற்றங்கள் ஏற்படும் காலங்களில் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அவசரத்தேவை ஏற்படின் தங்களுக்கு வாடகைக்கு விடப்பட்ட மாநகராட்சி சமுதாய நலக்கூடம் குறுகிய கால முன் அறிவிப்புடன் பொது நலன் கருதி, பெருநகர சென்னை மாநகராட்சியின் அவசர உபயோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை இதன் வாயிலாக தெரிவிக்கப்படுகிறது.
9. இச்சமுதாய நலக்கூடம் சமுதாய கலாச்சார அலுவல்களுக்காக வாடகைக்கு விடப்படும். அரசியல் சார்ந்த நிகழ்ச்சிக்கு அனுமதிக்கப்படமாட்டாது.
10. அரசியல் கட்சிகள் சம்மந்தமான கொடிகள் யாதும் இக்கட்டிடத்தில் பறக்கவிடக்கூடாது.
11. நிபந்தனைகளும், வாடகை விகிதங்களும் தேவைப்படும் போது சம்மந்தப்பட்ட அதிகாரிகளால் மாற்றப்படலாம்.
12. மின்சார விசை உபயோகத்திற்காக யூனிட் ஒன்றுக்கு தற்போது நடைமுறையில் உள்ள கட்டணம் வீதம் செலுத்த வேண்டும். மின்சாரத்தின் மூலமாய் அதிக அலங்காரங்கள் செய்து கொள்ள வேண்டுமானால் பெருநகர சென்னை மாநகராட்சி, மின்சாரப் பொறியாளரிடம் முன்னதாக உத்தரவு பெற்றுக் கொள்ள வேண்டும்.
13. அலுவல் நடத்துபவர்கள் பந்தல் விஷயமாகவும், ஒலிபெருக்கி விஷயமாகவும் வேண்டிய மாநகராட்சி, காவல் நிலைய உரிமையாணைகளை (Licence) தம் சொந்த செலவில் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**ம.அ.10.வ.து.ந.க.எண்.ஆர்4/2788/2021**

14. பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளருக்கு இச்சமுதாய நலக்கூடம் வாடகைக்குப் பெற வரும் விண்ணப்பங்களை அங்கீகரிக்கவோ, நிராகரிக்கவோ பூரண உரிமை உண்டு.

15. எக்காரணம் கொண்டும் முன்பதிவினை ரத்து செய்யப்படமாட்டாது. விண்ணப்பதாரரால் ரத்து செய்ய கோரும்பட்சத்தில் செலுத்தப்பட்ட வாடகை மற்றும் சேவை வரி நீங்கலாக முன்பணம் மட்டும் திரும்ப வழங்கப்படும்.

எனவே , கோட்டம் – 13 1, பகுதி – 28, 80 அடி சாலை, சென்னை – 600 078ல் புதியதாக கட்டப்பட்டுள்ள சமுதாய நலக் கூடத்தின் ஒரு நாள் வாடகை ரூ.10,000/. ( ரூபாய் பத்தாயிரம் மட்டும்) அரை நாள் வாடகை ரூ . 5000 /- ( ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) மற்றும் சேவை வரி, GST தனியே என நிர்ணயம் செய்யவும், முன் வைப்புத் தொகையை ரூ.20, 000/- ஆக நிர்ணயம் செய்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு அனுமதிக்கவும் சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 07.11.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"வாடகை தொகையை நிர்ணயம் செய்து, சமுதாய நலக் கூடத்தினை பொது மக்கள் பயன்பாட்டிற்கு அனுமதிக்க, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**பொ.து.ந.க.எண்.ஈ3/27051/2021**

**தீர்மானஎண். 832/2021** **நாள்:13-11-2021**

**அயற்பணி - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - பெருநகர சென்னை மாநகராட்சி, அயற்பணியில் பணியேற்ற அலுவலர்களின் விவரம் - சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும்.**

அரசாணை (வா) எண்.3732, பொது (சிறப்பு-அ)த் துறை, நாள்: 22.09.2021 மற்றும் அரசாணை (வா) எண்.3720, பொது (சிறப்பு-அ)த் துறை, நாள்: 21.09.2021ன்படி, கீழ்க்காணும் அலுவலர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி அயற்பணியில் பணியேற்ற விவரம் சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் தகவல் மற்றும் பதிவிற்கு சமர்ப்பித்த, முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 04.11.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

| வ. எண். | பெயர் (ம) பதவி | அரசாணைஎண். மற்றும் நாள் | அயற்பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|
| 1. | திரு. மா. சிவகுரு பிரபாகரன், இ.ஆ.ப., வட்டார துணை ஆணையர்(வடக்கு), பெருநகர சென்னை மாநகராட்சி | அரசாணை (வா) எண்.3732, பொது (சிறப்பு-அ)த் துறை, நாள்: 22.09.2021 | 05.10.2021 மு.ப. |
| 2. | திரு. ச. பிரசன்னா ராமசாமி மாவட்ட வருவாய் அலுவலர் (நிலம் மற்றும் உடைமை), பெருநகர சென்னை மாநகராட்சி | அரசாணை (வா) எண்.3720, பொது (சிறப்பு-அ)த் துறை, நாள்: 21.09.2021. | 06.10.2021 மு.ப. |

**“தகவல் மற்றும் பதிவிற்கு, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

* * * * * *

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ6/988/2019**

**தீர்மான எண். 833/2021** **நாள்:13-11-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம் - 8, பகுதி - 23, கோட்டம் - 104ல் சாஸ்திரி நகர் பகுதியில் உள்ள சமுதாய நலக் கூடம் மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியில் கட்டி முடிக்கப்பட்டுள்ள கட்டிடத்தின் தரை தளத்தை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சென்னை (வடக்கு) மண்டலம் விநியோகப்பிரிவு - Iன் நிறுவன நியாய விலைக்கடை பயன்பாட்டிற்கு ஒதுக்கீடு செய்ய அனுமதி.**

நிலம் மற்றும் உடைமைத்துறையின் 16.10.2020 நாளிட்ட கடிதம் மூலம், மண்டலம் - 8, பகுதி - 23, கோட்டம் - 104ல் சாஸ்திரி நகர் பகுதியில் உள்ள சமுதாய நலக் கூட கட்டிடத்தை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்ய இயலுமாயின் அதன் விவரம், பயன்பாட்டுத் தன்மை, பரப்பளவுடன் கூடிய புல வரைப்படம், வரைப்பட நகல் (உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்று), நிரந்தர நிலப் பதிவேட்டின் நகல் ஆகியவற்றுடன் வாடகை நிர்ணயம் செய்து இத்துறைக்கு அனுப்பி வைக்குமாறு 16.10.2020 நாளிட்ட கடிதத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டது.

06.07.2021 மற்றும் 16.07.2021 நாளிட்ட கடிதங்களில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் முதுநிலை மண்டல மேலாளர் (வடக்கு) அவர்கள் மண்டலம் - 8, கோட்டம் - 104, பகுதி - 23ல் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி சாஸ்திரி நகர் சமுதாய நலக் கூடத்தில் புதிய நியாய விலைக்கடை அமைப்பதற்கு அனுமதி வழங்க கோரியுள்ளார்கள்.

பார்வை - 3ல் கண்டுள்ள கடிதத்தில், சட்டமன்ற உறுப்பினர், எழும்பூர் சட்டமன்ற தொகுதி சென்னை அவர்களின் 31.07.2021 நாளிட்ட கடிதத்தில், புல்லாபுரத்தில் செயல்பட்டு வரும் அமுதம் சில்லறை அங்காடியில் இருந்து புதிய பூபதி நகர் ஓசான்குளம் வி.பி.சிங் நகர், காவலர் குடியிருப்பு, தாஸ்புரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 823 குடும்ப அட்டைகளைப் பிரித்து மண்டலம் - 8, கோட்டம் - 104, பகுதி - 23ல் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி, சாஸ்திரி நகர், சமுதாய நலக் கூடத்தில் புதிய நியாய விலைகடை அமைப்பதற்கு உள்நுழைவு அனுமதி வழங்க கோரப்பட்டு இருந்தும் இது தொடர்பான அறிக்கை பெறப்படாமல் நிலுவையில் இருப்பதாக தெரிவித்துள்ளார். இந்நிலையில் சாஸ்திரி நகரில் உள்ள சமுதாய நலக் கூடத்தில் அப்பகுதி மக்களுக்கான நியாய விலைக் கடையை அமைப்பதற்கு அக்கட்டிடத்தினை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக் கொள்ளப்பட்டது.

செயற்பொறியாளர், மண்டலம்-8 அவர்களின் 12.08.2021 நாளிட்ட குறிப்பில், மண்டலம் - 8, கோட்டம் - 104, பகுதி - 23ல் அமைந்துள்ள சாஸ்திரி நகர் பிரதான சாலையில் உள்ள சமூக நலக் கூடமானது பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் திருமதி.K. ரமணி கிருஷ்ணன், B.Sc., அவர்களின் 2013 - 2014 ஆம் ஆண்டு வார்டு மேம்பாட்டு நிதியின் கீழ் தரைதளம், முதல்தளம் கொண்ட கட்டிடம் கட்டப்பட்டு இதுநாள் வரையில் சமூக நலக் கூடமாக பயன்பாட்டில் உள்ளது என தெரிவித்துள்ளார். தற்பொழுது இரண்டாவது தளம் ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் மூலம் அமைக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர் - 8 அவர்களின் 23.08.2021 நாளிட்ட குறிப்பின்படி, சாஸ்திரி நகர் பகுதியில் வாழும் மக்களின் அடிப்படைத் தேவையான நியாய விலைக் கடைக்கு சாஸ்திரி நகர் பிரதான சாலையில் உள்ள சமுதாய நலக் கூடத்தின் தரைத்தளத்தில் உள்ள 570 சதுர அடி (செயற்பொறியாளரின் வரைப்படத்தின்படி) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு ஒதுக்கீடு செய்யவும், தரைதளத்திலிருந்து முதல் தளத்திற்கு தனிவழி பாதை அமைத்து முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்தை சமூக நலக் கூடமாக பயன்படுத்தவும் மற்றும் மாமன்ற தீர்மானத்தின்படி, நியாய விலைக் கடை பயன்பாட்டிற்கு பெருநகர சென்னை மாநகராட்சி விதிகளின்படி ஒதுக்கீடு செய்து வழங்கும்படி கோரப்பட்டது.

மேற்கண்ட விவரங்களை தெரிவித்து 07.10.2021 நாளிட்ட குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டதில் துணை ஆணையர் (வ (ம) நி) அவர்களால், மாநகர வருவாய் அலுவலர் அவர்களின் கருத்துரு பெற அறிவுறுத்தப்பட்டது. அதன்படி, மாநகர வருவாய் அலுவலர் அவர்களின் 13.10.2021 நாளிட்ட கருத்துருவில், கடந்த 3 ஆண்டுகளில் மேற்குறிப்பிட்ட சமுதாய நலக்கூடத்தில் முன்பதிவு மிகக் குறைவாகவே காணப்படுகிறது. விவரம் பின்வருமாறு.

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ6/988/2019**

| வ.எண் | சமுதாய நலக்கூடத்தின் பெயர் | ஆண்டு | நடைபெற்ற மொத்த நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | மொத்த வருவாய் | |
|---|---|---|---|---|---|
| | | | | வாடகை | GST |
| 1 | சாஸ்திரி நகர் வார்டு - 104, மண்டலம் - 8 | 2017 - 2018 | 2 | 2000 | 360 |
| 2 | | 2018 - 2019 | 10 | 10000 | 1800 |
| 3 | | 2019 - 2020 | 7 | 7000 | 1260 |
| **மொத்தம்** | | | **19** | **19000** | **3420** |

மேலும், மன்ற தீர்மான எண். 127/2016, நாள். 30.01.2016ன்படி, 780 சதுர அடி பரப்பளவு கொண்ட தரைதளத்தினை (780 சதுர அடி X ரூ.5/-) மற்றும் ஒரு மாத வாடகை ரூ.3,900/- மற்றும் 12 மாத வாடகை, முன்பணமாக ரூ.46,800/-ஐ மற்றும் கட்டிடத்தில் ஏதேனும் மாற்றம் செய்யவிருப்பின் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதி பெற்று தான் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒதுக்கீடு செய்யலாம் என்றும்,

எனவே, வார்டு - 104, மண்டலம் - 8, சாஸ்திரி நகரில் உள்ள இச்சமுதாய நலக்கூடத்தின் தரைதளத்தை மட்டும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நியாய விலைக் கடை அமைப்பதற்கு மேற்கண்டவாறு வாடகை நிர்ணயம் செய்து நிபந்தனையின் அடிப்படையில் வழங்கலாம் எனவும் முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்தினை சமுதாய நலக்கூடமாக பயன்படுத்தலாம் என மாநகர வருவாய் அலுவலர் அவர்களின் 13.10.2021 நாளிட்ட கருத்துருவின் மீது துணை ஆணையர் (வ (ம) நி) அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம் - 8, பகுதி - 23, கோட்டம் - 104ல் உள்ள சாஸ்திரி நகர் பகுதியில் வாழும் மக்களின் அடிப்படைத் தேவையான நியாய விலைக் கடைக்கு சாஸ்திரி நகர் பிரதான சாலையில் உள்ள சமுதாய நலக் கூடத்தின் தரைத்தளத்தில் உள்ள 570 சதுர அடி (செயற்பொறியாளரின் வரைப்படத்தின்படி) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு, மாநகர வருவாய் அலுவலர் அவர்களின் 13.10.2021 நாளிட்ட கருத்துருவின்படி, 780 சதுர அடி பரப்பளவு கொண்ட தரைதளத்தினை (780 சதுர அடி X ரூ.5/-) ஒரு மாத வாடகை ரூ.3,900/- மற்றும் 12 மாத வாடகை, முன்பணமாக ரூ.46,800/-ஐ மற்றும் கட்டிடத்தில் ஏதேனும் மாற்றம் செய்யவிருப்பின் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதி பெற்று தான் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒதுக்கீடு செய்யவும், தரைதளத்திலிருந்து முதல் தளத்திற்கு தனிவழி பாதை அமைத்து முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்தை சமூக நலக் கூடமாக பயன்படுத்தவும், சாஸ்திரி நகர் சமுதாய நலக்கூடத்தின் தரை தளத்தை நியாயவிலைக் கடைக்கு ஒதுக்கீடு செய்வதற்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 03.11.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"சமுதாய நலக்கூடத்தின் தரை தளத்தை நியாயவிலைக் கடைக்கு ஒதுக்கீடு செய்வதற்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*** * * * * ***

**பொ.து.ந.க.எண். இ7/30764/2021 &**
**ம.சே.து.ந.க.எண்.எப்5 /1428 /2021**

**தீர்மானஎண். 834/2021** **நாள்:13-11-2021**

**பணியமைப்பு – பெருநகர சென்னை மாநகராட்சி – பொதுத்துறை - மருத்துவ சேவைகள் துறை திருமதி. எஸ். கனகதுர்கா, தாய்சேய்நல அலுவலர், மருத்துவ சேவைகள் துறை தலைமையிடம் (ஊதியம் திரு.வி.க.நகர் மருத்துவ மண்டல அலுவலக ம் -6) அவர்கள் 16.11.2021 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில்செல்ல அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறை தலைமையிடத்தில் (ஊதியம் திரு.வி.க.நகர் மருத்துவ மண்டல அலுவலகம் -6) தாய்சேய்நல அலுவலராக பணிபுரியும் திருமதி. எஸ். கனகதுர்கா அவர்கள் தனது குடும்ப சூழ்நிலை காரணத்தினால் தன் விருப்ப ஓய்வு வேண்டி சிறப்பு அதிகாரி( மன்றம்) அவர்களுக்கு 19.08.2021 நாளிட்ட கடிதம் அளித்துள்ளார்.

திருமதி. எஸ்.கனகதுர்கா அவர்கள் 06.06.1990 அன்று தாய்சேய் நல அலுவலராக பணியில் சேர்ந்து தொடர்ந்து மருத்துவ சேவைகள் துறை தலைமையிடத்தில் (ஊதியம் திரு.வி.க.நகர் மருத்துவ மண்டல அலுவலகம் -6) பணிபுரிந்து வருகிறார் . தனியருக்கு தாய் சேய் நல அலுவலர் பதவியில் 06.06.1990 பணிவரன்முறைப்படுத்தியும் 15.07.1992 அன்று தகுதிகாண்பருவம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. தனியரது தாய்மொழி தெலுங்கு ஆகும். தனியர் 10ஆம் வகுப்பில் தமிழில் தேர்ச்சி பெற்றுள்ளார்

மண்டல மருத்துவ அலுவலர், திரு.வி.க.நகர் மருத்துவ மணடலம் – 6 அவர்களின் 25.09.2021 நாளிட்ட கடிதம் மண்டல மருத்துவ அலுவலர்கள் மருத்துவ மண்டலம் – 4, 8, 13 அவர்களின் முறையே 21.10.2021, 04.10.2021 மற்றும் 23.10.2021 நாளிட்ட கடிதங்களில், தனியர் பணிபுரிந்த காலங்களில் தனியர் மீது முன்பண நிலுவைத் தொகை, தணிக்கை தடை, குற்றவியல் நடவடிக்கை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்காணிப்பாளர்-2 மருத்துவ சேவைகள் துறை அவர்களின் 13.10.2021 நாளிட்ட குறிப்பில் தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ சேவைகள் துறை தணிக்கைப் பிரிவின், கண்காணிப்பாளர்-3, அவர்களின் 12.10.2021 நாளிட்ட குறிப்பில், 06.06.1990 முதல் 31.03.2020 வரை உள்ள ஆண்டுக்கான தணிக்கை அறிக்கையில் தனியர் மீது தணிக்கை தடை இல்லை என தெரிவிக்கப்படுகிறது. மேலும் தணிக்கை இருப்பது குறித்து பின்னர் தெரியவரின் தனியர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. (குறிப்பு 2020-2021 மற்றும் 2021-2022 தணிக்கை அறிக்கை பெறப்படவில்லை)

விழிப்பு அலுவலர் அவர்களின் 08.10.2021 நாளிட்ட கடிதத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி, விழிப்பு குழுமத்தில் தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது.

இயக்குநர், மாநில விழிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு அவர்களின் 06.10.2021 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, கூட்டுறவு சங்க 22.10.2021 நாளிட்ட கடிதத்தில், தற்பொழுது நிலுவை தொகை அசலும், வட்டியுமாக ரூ7,47,240/. நிலுவை உள்ளது இத்தொகையை பிடித்தம் செய்து சங்கத்திற்கு காசோலையாகவோ அல்லது RTGS மூலமாகவோ அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து தனியரிடம் ரூ.20/- முத்திரை தாளில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

தனியர் தன் விருப்ப ஓய்வுக்கு விண்ணபித்த நாளன்று 55 வயதினை பூர்த்தி செய்துள்ளார். அன்னாரின் மொத்த பணிக்காலம் 31 ஆண்டுகள் 05 மாதங்கள் 11 நாட்கள் ஆகும். தனியர் பணித்தகுதி இல்லாத காலமான 4 ஆண்டுகள் 11 மாதங்கள் 14 நாட்கள் சம்பளமில்லா விடுப்பு துய்த்து நிகர தகுதிப்பணிக்காலமான 26 ஆண்டுகள் 05 மாதங்கள் 27 நாட்கள் பணிநிறைவு செய்துள்ளளார். தனியர் வயது முதிர்வில் ஓய்வு பெறும் தகுதியான நாள் 31.12.2026 ஆகும். (தனியர் பிறந்த நாள்.24.07.1966 ஆகும்). தனியருக்கு சேர வேண்டிய இறப்பு கால பணிக்கொடை தொகை ரூ.16,51,455/- என தோராயமாக கணக்கிடப்பட்டுள்ளது.

**பொ.து.ந.க.எண். இ7/30764/2021 &**
**ம.சே.து.ந.க.எண்.எப்5 /1428 /2021**

அரசாணை எண்.350, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்த துறை நாள்: 07.10.1991ன்படியும், அரசாணை எண்.376, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்த துறை, நாள்: 11.12.1995ன்படியும், மொத்த பணிக்காலம் 31 ஆண்டுகள் 05 மாதங்கள் 11 நாட்கள் ஆகும். தனியர் பணித்தகுதி இல்லாத காலமான 4 ஆண்டுகள் 11 மாதங்கள் 14 நாட்கள் சம்பளமில்லா விடுப்பு துய்த்து நிகர தகுதிப்பணிக்காலமான 26 ஆண்டுகள் 05 மாதங்கள் 27 நாட்கள் பணிநிறைவு செய்துள்ளதாலும், தன் விருப்ப ஓய்விற்கு 90 நாட்கள் முன்னறிவிப்பு கடிதம் சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களிடம் வழங்கியுள்ளதாலும், சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் அனுமதி பெற்று தனியரை 16.11.2021 அன்று பிற்பகல் தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்கலாம்.

எனவே, மேலே தெரிவிக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையில் திருமதி. எஸ், கனகதுர்கா, தாய்சேய் நல அலுவலர், மருத்துவ சேவைகள் துறை தலைமையிடம் (ஊதியம் திரு.வி.க நகர் மருத்துவ மண்டலம்) அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கூட்டுறவு சங்கத்திற்கு செலுத்த வேண்டிய ரூ.7,47,240/- (ஏழு லட்சத்து நாற்பத்தி ஏழாயிரத்து இருநூற்றி நாற்பது மட்டும்) கடன் தொகையை தனியரின் ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்யவும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை, நிதி இழப்பீடு, 2020 – 21 மற்றும் 2021 – 22 ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதி தணிக்கை தடை வெளியிடப்பட்ட பின்னர் ஏதேனும் தணிக்கை தடை மற்றும் நீண்ட கால முன்பணம் சரிசெய்யப்படாமல் நிலுவையில் இருப்பது தெரியவரின் இதனை தனியரது ஓய்வூதிய பணிக்கொடை தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு தனியரை, 16.11.2021 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல சிறப்புஅதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய, முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 12.11.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“தன் விருப்ப ஓய்வில் செல்ல, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*** * * * * ***

## பொ.து.ந.க.எண். இ5/23937/2021 &
## ம.அ.14.ந.க.எண்.அ4/5132/2021

**தீர்மானஎண். 835 / 2021** **நாள்:15-11-2021**

**பணியமைப்பு – பெருநகர சென்னை மாநகராட்சி – பொதுத்துறை - திரு.*N*.கிருஷ்ணன், நிர்வாக அலுவலர், மண்டலம் *14* அவர்கள் *15.11.2021* அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் *14*ல் நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வரும் திரு.*N*.கிருஷ்ணன், (பணி எண்.*162500*) அவர்கள் *37* ஆண்டுகள் முழுமையாக நல்ல முறையில் பணிபுரிந்துள்ளதாகவும், கடந்த சில மாதங்களாக தொடர்ந்து தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் மருத்துவம் பார்த்துக்கொண்டு வருவதாகவும், உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் கல்லீரல் பிரச்சனையாலும், *(Liver problem)* தன்னால் முழுமையாக பணியில் முழு கவனத்தையும் செலுத்த இயலவில்லை என்றும், தன்னுடைய குடும்ப சூழ்நிலையும் வெகுவாக பாதிக்கப்படுகின்ற நிலை ஏற்பட்டுள்ளதால் தன்னுடைய சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதி அளிக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி, சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களிடம் *18.08.2021* நாளிட்ட கடிதம் அளித்துள்ளார்.

திரு.*N*. கிருஷ்ணன், நிர்வாக அலுவலர் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் *27.02.1984* அன்று ஆண் களப்பணியாளராக பணியில் சேர்ந்துள்ளார். மேற்படி தனியருக்கு ஆண் களப்பணியாளர் பதவியில் *27.02.1984* அன்று பணிவரன்முறை செய்யப்பட்டு *27.02.1986* அன்று தகுதிகாண்பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. தனியர் *05.05.1989* அன்று தொகுப்பாளர் மற்றும் எழுத்தராக பதவி உயர்வு பெற்றும் அதனைத் தொடர்ந்து *18.10.2012* அன்று முதல் கண்காணிப்பாளராகவும், பின்பு *19.11.2020* முதல் நிர்வாக அலுவலராக பதவி உயர்வு பெற்று தற்போது மண்டலம் *14*ல் பணிபுரிந்து வருகிறார். மேற்படி தனியருக்கு நிர்வாக அலுவலர் பதவியில் *19.11.2020* அன்று பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. தனியரின் பணிவிவரங்கள் கீழ்வருமாறு அளிக்கப்படுகிறது.

| வ. எண். | திரு.*N*.கிருஷ்ணன், நிர்வாக அலுவலர் அவர்களின் பணி விவரங்கள் | | | |
|---|---|---|---|---|
| *1* | பிறந்த தேதி | *29/09/1964* | | |
| *2* | தனியர் முதன் முதலில் பணியில் சேர்ந்த பதவி மற்றும் நாள் | ஆண் களப்பணியாளர் - நாள் : 27.02.1984 | | |
| *3* | தனியர் பணிபுரிந்த துறைகள் மற்றும் பணிபுரிந்த காலம் | *27.02.1984* முதல் *04.05.1989* வரை | ஆண் களப்பணியாளர் | மாவட்ட குடும்ப நலத்துறை |
| | | *05.05.1989* முதல் *18.10.2012* வரை | தொகுப்பாளர் மற்றும் எழுத்தர் | மாவட்ட குடும்ப நலத்துறை |
| | | *18.10.2012* முதல் *18.11.2020* வரை | கண்காணிப்பாளர் | மண்டலம் 8 |
| | | *19.11.2020* முதல் இதுநாள் வரை | நிர்வாக அலுவலர் | மண்டலம் 14 |
| *4* | தனியர் பெற்ற பதவி உயர்வுகள் மற்றும் பணியில் சேர்ந்த நாள் | தொகுப்பாளர் மற்றும் எழுத்தர் - *05.05.1989*<br>கண்காணிப்பாளர் - *18.10.2012*<br>நிர்வாக அலுவலர் - *19.11.2020* | | |
| *5* | தனியர் தன் விருப்ப ஓய்வு கடிதத்தினை சிறப்பு அதிகாரி, மன்றம் அவர்களுக்கு அளித்த நாள் | *18.08.2021* | | |
| *6* | தன் விருப்ப ஓய்வு பெறும் நாள் | 15.11.2021 அன்று பிற்பகல் முதல் | | |
| *7* | தன் விருப்ப ஓய்வுக்கு விண்ணப்பித்த அன்று தனியரின் வயது | 57 வருடங்கள் | | |

**பொ.து.ந.க.எண். இ5/23937/2021 &**
**ம.அ.14.ந.க.எண்.அ4/5132/2021**

| | | |
|---|---|---|
| 8 | தனியர் பணி நிறைவு செய்த ஆண்டுகள் | 37 வருடங்கள் |
| 9 | தனியர் உள்ளபடியாக ஓய்வு பெறும் நாள் மற்றும் வருடம் | அரசாணை நிலை எண். 51, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (எஸ்) துறை நாள் – 07.05.2020ன்படி 30.09.2024. |

தனியர் பணிபுரிந்த துறைகள் / மண்டல அலுவலகங்களிலிருந்து தனியர் மீது தணிக்கைத் தடைகள், முன்பண தீர்வு செய்தல் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவித்து இன்மை அறிக்கைகள் பெறப்பட்டுள்ளது.

நிர்வாக இயக்குநர், சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கூட்டுறவு சங்கம் அவர்களின் 21.10.2021 நாளிட்ட கடிதத்தில், தனியர் சென்னை மாநகராட்சி கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினர் இல்லை என சான்றளிக்கப்பட்டுள்ளது. மேலும், உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறையிலிருந்து தணிக்கை சான்று ஏதும் பெறப்படவில்லை.

பெருநகர சென்னை மாநகராட்சி, காவல் துறை துணை கண்காணிப்பாளர் / விழிப்பு அலுவலர் அவர்களின் 20.10.2021 நாளிட்ட கடிதத்தில் திரு.N.கிருஷ்ணன், நிர்வாக அலுவலர், மண்டலம்-14 அவர்கள் மீது இன்றைய தேதியில் பெருநகர சென்னை மாநகராட்சி, விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயக்குநர், விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு துறை அவர்களின் 02.11.2021 நாளிட்ட கடிதத்தில் திரு.N.கிருஷ்ணன், நிர்வாக அலுவலர், மண்டலம் 14 அவர்கள் மீது *As on date, no enquiry or investigation is pending against the official* என சான்று பெறப்பட்டுள்ளது.

மேலும், தனியரின் ஊதிய சீட்டினை ஆய்வு செய்ததில் பண்டிகை முன்பண நிலுவை ரூ.1000/- நிலுவையில் இருப்பது கண்டறியப்பட்டது. மேற்படி நிலுவை தொகையானது பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலத்தில் 09.11.2021 அன்று செலுத்தப்பட்டு அதற்கான ரசீது இணைக்கப்பட்டுள்ளது. *(Receipt No 11/2021-22/0968256 - Challan No NP/2021-22/0017904 dated 08/11/2021).*

மண்டல அலுவலர் 14 அவர்கள் சிறப்பு அதிகாரி, மன்றம் அவர்களுக்கு சமர்ப்பித்துள்ள 09.11.2021 நாளிட்ட குறிப்பில், திரு.N.கிருஷ்ணன், நிர்வாக அலுவலர், மண்டலம் 8ல் பணிபுரிந்த காலங்களான 18.10.2012 முதல் 18.11.2020 வரை தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைத்தடை வருடம் 2018-2019 பத்தி எண். 36 நிலுவையில் உள்ளது என்றும், மேற்கண்ட பத்தியில் நிதி இழப்பீடு ஏதும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. திரு. N.கிருஷ்ணன், நிர்வாக அலுவலர், மண்டலம் 14 அவர்கள் மீது தணிக்கைத்தடை மற்றும் நீண்ட கால முன்பண நிலுவைத் தொகை, ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் அத்தொகையினை தனியருக்கு வழங்கப்படும் பணிக்கொடை தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு திரு.N.கிருஷ்ணன், நிர்வாக அலுவலர் அவர்களை 15.11.2021 அன்று பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்வதற்கு அனுமதி வேண்டியதில் வட்டார துணை ஆணையர் (தெற்கு) அவர்கள் அனுமதி வழங்கியதை தொடர்ந்து மேற்படி தனியரை தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்குமாறு சிறப்பு அதிகாரி, மன்றம் அவர்களின் ஆணை வேண்டி குறிப்பு பெறப்பட்டுள்ளது.

மேலும், திரு.N.கிருஷ்ணன், நிர்வாக அலுவலர், மண்டலம்-14 அவர்கள் தன் விருப்ப ஓய்வில் செல்ல கடிதம் அளித்த பிறகு எவ்விதமான ஊதியமில்லா விடுப்பும் துய்க்கவில்லை என்றும், தனியர் தன் விருப்ப ஓய்வு வேண்டி மனு அளித்த நாளிலிருந்து 90 நாட்கள் நிறைவடையும் நாளான 15.11.2021 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல தகுதி உடையவராகிறார்.

அரசாணை எண்.376 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை, நாள்-11.12.1995-ன்படி, திரு.N.கிருஷ்ணன், நிர்வாக அலுவலர், மண்டலம்-14 அவர்கள் 37 வருடங்கள் பணிக்காலம் நிறைவு செய்து 57 வயதை கடந்துள்ளதாலும், தன் விருப்ப ஓய்வு அளிக்க கோரி 90 நாட்கள் முன்னறிவிப்பு கடிதம் சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களிடம் அளித்துள்ளதால், சிறப்பு அதிகாரி(மன்றம்) அவர்களின் அனுமதிக்குட்பட்டு திரு.N.கிருஷ்ணன், நிர்வாக அலுவலர், மண்டலம் 14 அவர்களை தன்விருப்ப ஓய்வில் *(Voluntary Retirement)* செல்ல அனுமதிக்கலாம் என சமர்ப்பிக்கப்படுகிறது.

**<u>பொ.து.ந.க.எண். இ5/23937/2021 &</u>**

**<u>ம.அ.14.ந.க.எண்.அ4/5132/2021</u>**

ஆகவே, திரு.N.கிருஷ்ணன், நிர்வாக அலுவலர், மண்டலம்-14 அவர்கள் தன்விருப்ப ஓய்வு *(Voluntary Retirement)* அளிக்க கோரி 90 நாட்கள் முன்னறிவிப்புடன் 18.08.2021 நாளிட்ட கடிதத்தினை சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களுக்கு சமர்ப்பித்துள்ளதன் அடிப்படையில், தனியர் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை, நிதி இழப்பீடு, தணிக்கைத் தடை மற்றும் நீண்ட கால முன்பணம் சரி செய்யப்படாமல் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் அதனை தனியரது பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படி தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு 15.11.2021 அன்று பிற்பகல் முதல் தனியரை தன்விருப்ப ஓய்வில் *(Voluntary Retirement)* செல்ல அனுமதிக்க, சிறப்புஅதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய, முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 15.11.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“தன் விருப்ப ஓய்வில் செல்ல, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

* * * * * *

**இ.பொ.து.வ.செ. வா.ப.ந.க. எண். பிசி/720/2021**

**தீர்மான எண். 836/2021** **நாள்:15-11-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - வட சென்னை வாகன பணிமனையில் இயங்கும் டீசல் பங்கிற்கு 2021-22 ஆம் ஆண்டிற்கு கூடுதல் டீசல் கொள்முதல் செய்ய - இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டது - தேவைக்கேற்ப எரிபொருள் கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி.**

சென்னை மாநகராட்சி மன்றத்தீர்மானம் எண். 180/78 நாள். 26.02.78 ன்படி, சென்னை மாநகராட்சி உபயோகத்திற்கு தேவைப்படும் டீசல், இதர எரிபொருட்கள் ஒப்பம் கோருவதிலிருந்து விலக்கு அளித்து, இந்திய அரசு நிறுவனங்களான இந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து 1978-79 ஆம் ஆண்டிலிருந்து விலைப்புள்ளி பெற்று கொள்முதல் செய்ய அனுமதி பெறப்பட்டுள்ளது. அன்றைய கால கட்டத்தில், தென்சென்னை மற்றும் வடசென்னையில் உள்ள மண்டல வாகன இயக்கூர்தி நிலையம் (1 முதல் 10 வரை) அமைக்கப்பட்ட பின்னர், இந்திய அரசு நிறுவனங்களான இந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனங்களால் டீசல் சேமிப்பு அறைகள், மண்டல வாகன நிலையங்களில் நிறுவப்பட்டன, சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்ட பின் 2013 முதல் தென் சென்னை, வடசென்னை மற்றும் மத்திய சென்னை என பிரிக்கப்பட்டன. பெருநகர சென்னை மாநகராட்சியாக உருவெடுத்தப்பிறகு, வடக்கு வட்டாரமாக மண்டலம்-1 முதல் 5 வரை பிரித்து அளிக்கப்பட்டது.

இயந்திர பொறியியல் துறை, வட சென்னை வாகன பணிமனையின் கீழ் இயங்கிவரும் மண்டலம்-1 முதல் 5 வரை உள்ள லாரி நிலையத்தில் அசோக்லைலேண்ட், சுவராஜ் மஸ்தா, டாடா, எய்ச்சர், டிராக்டர், சிறியவகை முன்பளு தூக்கிகள், மின்துறை வாகனங்கள், பொக்லைன்கள், புல்டோசர்கள், கனரக காம்பேக்டர்கள், இலகுரக காம்பேக்டரகள் போன்ற வாகனங்கள் 254 எண்ணிக்கைக்கு மேல் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. மேலும், மின்வெட்டின் காரணமாக மண்டலங்களில் உள்ள சென்னை மாநகராட்சி மருத்துவமனைகள் மற்றும் மண்டல அலுவலகங்களில் இயங்கும் ஜெனரேட்டர் ஆகியவற்றிற்கும் எரிபொருள் வழங்கப்பட்டு வருகிறது. மழைக்காலங்களில் தண்ணீர் இரைப்பதற்காக ராட்சத மோட்டார்களுக்கும் டீசல் வழங்கப்படுகிறது.

சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண். 383/2021, நாள். 10.03.2021ல், வட சென்னை வாகன பணிமனையில் இயங்கும் டீசல் பங்க் மூலம் கொள்முதல் செய்ய, 2021-22 ஆம் ஆண்டிற்கு நிர்வாக அனுமதி ஆணையின்படி, மண்டலம் 5 மற்றும் வட சென்னை வாகன பணிமனை சார்ந்த அனைத்து வாகனங்களுக்கு உட்பட்ட புகை பரப்பும், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கு டீசல் விநியோகம் செய்யப்படும் என ஆணை பெறப்பட்டது.

இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து தேவையான டீசல் 1200 கிலோ லிட்டர் கொள்முதல் செய்ய ரூ.9,99,93,600/- ஆணை பெறப்பட்டது. தற்போது வரை வட சென்னை வாகன பணிமனையில் இயங்கும் டீசல் பங்கிற்கு வாங்கிய டீசல் பெறப்பட்ட விவரங்கள் பின்வருமாறு,

| 2021-22 | தொகை (₹) | கிலோ லிட்டர் |
|---|---|---|
| நிர்வாக அனுமதி ஆணை | 9,99,93,600.00 | 1200 |
| முன்கூட்டியே வரையப்பட்டது | 7,68,59,750.00 | 840 |
| **இருப்பு** | 2,31,33,850.00 | 360 |

மேலே குறிப்பிட்ட அட்டவணையின்படி, இருப்பு மொத்தம் டீசல் 360 KL கொள்முதல் செய்ய ரூ..2,31,33,850/- இவை வரவிருக்கும் நாட்களுக்கு பயன்படுத்தப்பட உள்ளது. தற்போது 1 KLக்கான தொகை ரூ.99,441/- எனவே 360KL கொள்முதல் செய்வதற்கு தேவைப்படும் தொகை தோராயமாக ரூ.3,57,98,760 தேவைப்படும். இந்த வேறுப்பாட்டின் விலை ஏற்றத்தினால், தோராயமாக 233KL டீசல் மட்டுமே கொள்முதல் செய்யப்படும், எனவே, வட சென்னை வாகன பணிமனையில் அமைந்துள்ள எரிபொருள் கிடங்கிற்கு 2021-2022 ஆம் ஆண்டிற்கு கூடுதல் டீசல் கொள்முதல் செய்ய ஆணை வேண்டப்படுகின்றது.

**இ.பொ.து.வ.செ. வா.ப.ந.க. எண். பிசி/720/2021**

இயந்திர பொறியியல் துறை, வட சென்னை வாகன பணிமனையின் கீழ் இயங்கி வரும், மண்டலம்-1, 2, 5 மற்றும் வட சென்னை வாகன பணிமனை சார்ந்த அனைத்து வாகனங்களுக்கு உட்பட்ட புகை பரப்பும், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள், மற்றும் சிறப்பு பிரத்யோக வாகனங்களுக்கு தேவைப்படும் எரிபொருள் (டீசல்) வட சென்னை வாகன பணிமனையில் இயங்கும் டீசல் பங்க் மூலம் நிரப்பப்பட்டு வருகின்றது.

பெருநகர சென்னை மாநகராட்சி, வடசென்னை பிரதான வாகன நிலையம் கட்டுப்பாட்டில் எரி பொருள் சேமிப்பு தொட்டி உரிய நிறுவனத்தால் நிறுவப்பட்டுள்ளது.

| எரி பொருள் நிறுவனம் பெயர் | சேமிப்பு தொட்டியுள்ள இடம் | டீசல் விநியோகிக்கப்படும் மண்டலம் |
|---|---|---|
| இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் | வடசென்னை பிரதான வாகன நிலையம் | மண்டலம்-1, 2, 5 மற்றும் வட சென்னை வாகன பணிமனை சார்ந்த அனைத்து வாகனங்களுக்கு உட்பட்ட புகை பரப்பும், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள், மற்றும் சிறப்பு பிரத்யோக வாகனங்களுக்கும் |

பெருநகர சென்னை மாநகராட்சி, வட சென்னை வாகன பணிமனையில் தேவையான எரிபொருட்கள் சேமிப்பு தொட்டி நிறுவிய மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து மட்டுமே கொள்முதல் செய்யப்படுவதால், டீசல் எரிபொருட்களின் விலை விகிதத்தை தெரிவிக்குமாறு இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தை, கடிதத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்நிறுவனம் அளித்த விலைப்புள்ளிகள் கீழே தொகுத்து சமர்ப்பிக்கப்படுகிறது.

| நிறுவனம் | பொருள் விவரம் | 1 KL க்கான தொகை ரூபாய் (அனைத்து வரிகள் உட்பட | கூடுதல் மொத்த தேவை கிலோ லிட்டர் (2021-2022 ஆம் ஆண்டிற்கு) |
|---|---|---|---|
| இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் | டீசல் | ரூ.99,441 (நாள்:30.10.2021) | 444 |
| மொத்த தொகை (அனைத்து வரிகள் உட்பட) | 444 கி.லி. x ரூ.99,441= ரூ. 4,41,51,804/- (ரூபாய் நான்கு கோடியே நாற்பத்தி ஒரு லட்சத்து ஐம்பத்து ஒராயிரத்து எண்ணூற்றி நான்கு மட்டும்) | | |

மேற்கண்ட விலைப்புள்ளி, எரிபொருளை பெருநகர சென்னை மாநகராட்சி வட சென்னை பிரதான வாகன பணிமனையில் மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து வாகனங்கள் மூலமாக கொண்டுவந்து இறங்கி கொடுப்பதற்கு உட்பட்டதாகும். மேலும் இந்த விலைப்புள்ளி மத்திய அரசு அறிவிக்கும் விலை உயர்வுக்கு உட்பட்டது என்றும், இதற்கான விற்பனை தொகையை முன்பணமாக காசோலை செலுத்த வேண்டும் எனவும், மேற்கண்ட நிறுவனம் நிபந்தனைகள் தெரிவித்துள்ளன. இந்நிறுவன விலைப்புள்ளி சமமாக உள்ளதாலும், மத்திய அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் விலைப்புள்ளிகளின்படி மேற்கூறிய பொருட்களை கொடுத்து வருவதால் இந்த விலைப்புள்ளி ஏற்றுக் கொள்ளாலம்.

மேலும், வட சென்னை வாகன பணிமனையில் அமைந்துள்ள எரிபொருள் கிடங்கிற்கு 2021-2022 ஆம் ஆண்டிற்கு கூடுதல் டீசல் கொள்முதல் செய்ய தோராயமாக, 444 கிலோ லிட்டர் டீசலை பெறுவதற்கு மொத்த தொகையான ரூ. 4,41,51,804/- (ரூபாய் நான்கு கோடியே நாற்பத்தி ஒரு லட்சத்து ஐம்பத்து ஒராயிரத்து எண்ணூற்றி நான்கு மட்டும்) அனைத்து வரிகள் உட்பட தேவைப்படுகின்றது. இச்செலவினம் 2021-2022 ஆம் ஆண்டிற்கு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், இயந்திர பொறியியல் துறை - கணக்கு எண்: 230-20-03-06 – எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் செலவு செய்யப்படும். மேலும். இந்நிறுவனம் இந்திய அரசின் நிறுவனம் ஆதலால், இவை பிணை வைப்புத்தொகை மற்றும் காப்பீட்டு தொகை செலுத்துவதில் இருந்தும், உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**இ.பொ.து.வ.செ. வா.ப.ந.க. எண். பிசி/720/2021**

எனவே, வட சென்னை வாகன பணிமனையில் இயங்கும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் எரிபொருள் கிடங்கு மூலம் தேவையான எரிபொருள், மேற்கண்ட மத்திய அரசு நிறுவனத்திடமிருந்து அவர்கள் அளித்த விலைப்புள்ளிகளின் படி, அல்லது வாங்கும் காலத்தில் அப்போதைய சந்தை விலைக்கு வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

டீசல் கொள்முதல் செய்ய, 2001-02 ஆம் ஆண்டிற்கு மன்றத்தீர்மான எண்.92 / 2000 நாள். 28.02.2000 அனுமதியின்படி, அரசின் பின் ஏற்பினை பெறுவதற்கு அனுப்பப்பட்ட கோப்பின் மீது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் (மா.ந.1) துறை அளித்த அரசு ஆணை நிலை எண்.102 நாள்.07.08.2000ல் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் ஆகிய மூன்று நிறுவனங்களும் மத்திய அரசின் நிறுவனமாக இருக்கும் வரை, ஒவ்வொரு ஆண்டும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசல் மற்றும் பெட்ரோல் இனி பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ள அனுமதி அளித்து நிரந்திர ஆணை வெளியிடப்பட்டுள்ளது,

அரசு ஆணையினை அமுல்படுத்திட மன்றத்தீர்மான எண். 486/01, நாள்.18.09.2001.-ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், ஒவ்வொரு ஆண்டும் ஆணையரின் ஆணை பெற்று டீசல், பெட்ரோல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திரப் பொறியியல் துறை, வட சென்னை வாகன பணிமனை கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட மண்டலம்-1, 2, 5 மற்றும் வட சென்னை வாகன பணிமனை சார்ந்த அனைத்து வாகனங்களுக்கும் புகை பரப்பும், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள், மற்றும் சிறப்பு பிரத்யோக வாகனங்களுக்கு தேவைப்படும் எரிபொருள் (டீசல்) வட சென்னை வாகன பணிமனையில் இயங்கும் டீசல் பங்க் மூலம் நிரப்பப்பட அனுமதி வேண்டியும்,

2. வட சென்னை வாகன பணிமனையில் இயங்கும் டீசல் பங்க்கிற்கு தேவையானஎரிபொருள் 2021-2022 ஆம் ஆண்டிற்கு கூடுதல் 444 கிலோலிட்டர் டீசலை கொள்முதல் செய்வதற்கு மொத்த தொகையான ரூ. 4,41,51,804/- (ரூபாய் நான்கு கோடியே நாற்பத்தி ஒரு லட்சத்து ஐம்பத்து ஓராயிரத்து எண்ணூற்றி நான்கு மட்டும்) செலவீனத்தில் அல்லது கொள்முதல் செய்யும் போது அமுலில் உள்ள விலைக்கு திருவாளர்கள். இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து தேவைகேற்ப கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி வேண்டியும்,

3. வட சென்னை வாகன பணிமனையில் இயங்கும் டீசல் பங்க்கிற்கு தேவையான எரிபொருளை தேவைக்கேற்ப அவ்வவ்பொழுது மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்) அவர்களின் ஆணை பெற்று இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திற்கு RTGS மூலம் முன்பணமாக காசோலை செலுத்தி டீசல் கொள்முதல் செய்ய அனுமதி வேண்டியும்,

4. இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் இந்திய அரசு நிறுவனம் என்பதால், அவர்களுக்கு பிணை வைப்பு தொகை கட்டுவதிலிருந்து, பாதுகாப்பு தொகை செலுத்துவதிலிருந்தும் மற்றும் உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கவும்,

5. இந்திய அரசு நிறுவனங்கள் கோரியபடி, தேவையான முன்பணத்தை தேவைக்கேற்ப அவ்வப்போது RTGS மூலமாக அளிக்கவும்,

6. இதற்கான செலவினத்தை 2021-2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், இயந்திர பொறியியல் துறை – கணக்கு எண்: 230-20-03-06- எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் செலவு செய்யவும்,

7. **ஒவ்வொரு ஆண்டும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசலை, இனி சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ளலாம் என அரசு நிரந்தர ஆணை அளித்துள்ளதால், அரசின் பின்னேற்பு இன்றி கொள்முதல்செய்யவும்,**

மேற்கண்ட 1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 13.11.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*** * * * * ***

இ.பொ.து.வ.செ. வா.ப.ந.க. எண். பிசி/721/2021

தீர்மான எண். 837/2021 நாள்:15-11-2021

**பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - மண்டலம் 4 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்கிற்கு 2021-22 ஆம் ஆண்டிற்கு கூடுதல் டீசல் கொள்முதல் செய்ய - இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டது - தேவைக்கேற்ப எரிபொருள் கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி.**

சென்னை மாநகராட்சி மன்றத்தீர்மானம் எண். 180/78 நாள். 26.02.78 ன்படி, சென்னை மாநகராட்சி உபயோகத்திற்கு தேவைப்படும் டீசல், இதர எரிப்பொருட்கள் ஒப்பம் கோருவதிலிருந்து விலக்கு அளித்து, இந்திய அரசு நிறுவனங்களான இந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து 1978-79 ஆம் ஆண்டிலிருந்து விலைப்புள்ளி பெற்று கொள்முதல் செய்ய அனுமதி பெறப்பட்டுள்ளது. அன்றைய கால கட்டத்தில், தென்சென்னை மற்றும் வடசென்னையில் உள்ள மண்டல வாகன இயக்கூர்தி நிலையம் (1 முதல் 10 வரை) அமைக்கப்பட்ட பின்னர், இந்திய அரசு நிறுவனங்களான இந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனங்களால் டீசல் சேமிப்பு அறைகள், மண்டல வாகன நிலையங்களில் நிறுவப்பட்டன, சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்ட பின் 2013 முதல் தென் சென்னை, வடசென்னை மற்றும் மத்திய சென்னை என பிரிக்கப்பட்டன. பெருநகர சென்னை மாநகராட்சியாக உருவெடுத்தப்பிறகு, வடக்கு வட்டாரமாக மண்டலம்-1 முதல் 5 வரை பிரித்து அளிக்கப்பட்டது.

இயந்திர பொறியியல் துறை, வட சென்னை வாகன பணிமனையின் கீழ் இயங்கிவரும் மண்டலம்-1 முதல் 5 வரை உள்ள லாரி நிலையத்தில் அசோக்லைலேண்ட், சுவராஜ் மஸ்தா, டாடா, எய்ச்சர், டிராக்டர், சிறியவகை முன்பளு தூக்கிகள், மின்துறை வாகனங்கள், பொக்லைன்கள், புல்டோசர்கள், கனரக காம்பேக்டர்கள், இலகுரக காம்பேக்டரகள் போன்ற வாகனங்கள் 254 எண்ணிக்கைக்கு மேல் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. மேலும் மின்வெட்டின் காரணமாக மண்டலங்களில் உள்ள சென்னை மாநகராட்சி மருத்துவமனைகள் மற்றும் மண்டல அலுவலகங்களில் இயங்கும் ஜென்ரேட்டர் ஆகியவற்றிக்கும் எரிபொருள் வழங்கப்பட்டு வருகிறது. மழைக்காலங்களில் தண்ணீர் இரைப்பதற்காக ராட்சத மோட்டார்களுக்கும் டீசல் வழங்கப்படுகிறது.

சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண். 384/2021, நாள்.10.03.2021ல், மண்டலம் 4 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க் மூலம் கொள்முதல் செய்ய, 2021-22 ஆம் ஆண்டிற்கு நிர்வாக அனுமதி ஆணையின்படி, மண்டலம் 4 லாரி நிலையத்திற்கு சார்ந்த அனைத்து வாகனங்களுக்கு டீசல் விநியோகம் செய்யப்படும் என ஆணை பெறப்பட்டது.

இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து தேவையான டீசல் 600 கிலோ லிட்டர் கொள்முதல் செய்ய ரூ.4,99,96,800/- ஆணை பெறப்பட்டது. தற்போது வரை வட சென்னை வாகன பணிமனையில் இயங்கும் டீசல் பங்கிற்கு வாங்கிய டீசல் பெறப்பட்ட விவரங்கள் பின்வருமாறு,

| 2021-22 | தொகை (₹) | கிலோ லிட்டர் |
|---|---|---|
| நிர்வாக அனுமதி ஆணை | **4,99,96,800.00** | |
| முன்கூட்டியே வரையப்பட்டது | **3,86,88,561.00** | **420** |
| **இருப்பு** | **1,13,08,239.00** | **180** |

மேலே குறிப்பிட்ட அட்டவணையின்படி, இருப்பு மொத்தம் டீசல் 180 KL கொள்முதல் செய்ய ரூ.1,13,08,239/- இவை வரவிருக்கும் நாட்களுக்கு பயன்படுத்தப்பட உள்ளது. தற்போது 1 KLக்கான தொகை ரூ.91,581/- எனவே 180KL கொள்முதல் செய்யவதற்கு தேவைப்படும் தொகை தோராயமாக ரூ..1,64,84,580/- தேவைப்படும். இந்த வேறுப்பாட்டின் விலை ஏற்றத்தினால், தோராயமாக 123KL டீசல் மட்டுமே கொள்முதல் செய்யபடும், எனவே, வட சென்னை வாகன பணிமனையில் அமைந்துள்ள எரிபொருள் கிடங்கிற்கு 2021-2022 ஆம் ஆண்டிற்கு கூடுதல் டீசல் கொள்முதல் செய்ய அனுமதி வேண்டப்படுகின்றது.

**இ.பொ.து.வ.செ. வா.ப.நு.க. எண். பிசி/721/2021**

இயந்திர பொறியியல் துறை, வட சென்னை வாகன பணிமனையின் கீழ் இயங்கி வரும், மண்டலம்-3 மற்றும் 4 லாரி நிலையத்தை சார்ந்த அனைத்து வாகனங்களுக்கும், புகை பரப்பும், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள், மற்றும் சிறப்பு பிரத்யோக வாகனங்களுக்கு தேவைப்படும் எரிபொருள் (டீசல்) மண்டலம் 4 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க் மூலம் நிரப்பப்பட்டு வருகின்றது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 4 லாரி நிலையம் கட்டுப்பாட்டில் எரி பொருள் சேமிப்பு தொட்டி உரிய நிறுவனத்தால் நிறுவப்பட்டுள்ளது.

| எரி பொருள் நிறுவனம் பெயர் | சேமிப்பு தொட்டியுள்ள இடம் | டீசல் விநியோகிக்கப்படும் மண்டலம் |
|---|---|---|
| இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் | மண்டலம் 4 லாரி நிலையம் | மண்டலம்-3 மற்றும் 4 லாரி நிலையத்தை சார்ந்த அனைத்து வாகனங்களுக்கும், புகை பரப்பும், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள், மற்றும் சிறப்பு பிரத்யோக வாகனங்களுக்கும் |

பெருநகர சென்னை மாநகராட்சி, - மண்டலம் 4 லாரி நிலையத்திற்கு தேவையான எரிபொருட்கள் சேமிப்பு தொட்டி நிறுவிய மேற்கண்ட நிறுவனங்களிடமிருந்து மட்டுமே கொள்முதல் செய்யப்படுவதால், டீசல் எரிபொருட்களின் விலை விகிதத்தை தெரிவிக்குமாறு இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்தை கடிதத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்நிறுவம் அளித்த விலைப்புள்ளிகள் கீழே தொகுத்து சமர்ப்பிக்கப்படுகிறது.

| நிறுவனம் | பொருள் விவரம் | 1 KL க்கான தொகை ரூபாய் (அனைத்து வரிகள் உட்பட | கூடுதல் மொத்த தேவை கிலோ லிட்டர் (2021-2022 ஆம் ஆண்டிற்கு) |
|---|---|---|---|
| இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் | டீசல் | ரூ.91,581 (நாள்:05.11.2021) ந.கோ.ப.எண்: | 324 |
| மொத்தம் தொகை (அனைத்து வரிகள் உட்பட) | 324 கி.லி. x ரூ.91,581 = ரூ.2,96,72,244/- (ரூபாய் இரண்டு கோடியே தொண்ணூற்று ஆறு லட்சத்து எழுபத்தி இரண்டாயிரத்து இருநூற்றி நாற்பத்து நான்கு மட்டும்) | | |

மேற்கண்ட விலைப்புள்ளி, எரிபொருளை பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 4 லாரி நிலையத்தில் மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து வாகனங்கள் மூலமாக கொண்டுவந்து இறங்கி கொடுப்பதற்கு உட்பட்டதாகும். மேலும் இந்த விலைப்புள்ளி மத்திய அரசு அறிவிக்கும் விலை உயர்வுக்கு உட்பட்டது என்றும், இதற்கான விற்பனை தொகையை முன்பணமாக காசோலை செலுத்த வேண்டும் எனவும், மேற்கண்ட நிறுவனம் நிபந்தனைகள் தெரிவித்துள்ளது. இந்நிறுவன விலைப்புள்ளி சமமாக உள்ளதாலும், மத்திய அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் விலைப்புள்ளிகளின்படி மேற்கூறிய பொருட்களை கொடுத்து வருவதால் இந்த விலைப்புள்ளி ஏற்றுக் கொள்ளாலம்.

மேலும், மண்டலம் 4 லாரி நிலையத்தில் அமைந்துள்ள எரிபொருள் கிடங்கிற்கு 2021-2022 ஆம் ஆண்டிற்கு கூடுதல் டீசல் கொள்முதல் செய்ய தோரயமாக, 324 கிலோ லிட்டர் டீசலை பெறுவதற்கு மொத்த தொகையான ரூ. 2,96,72,244/- (ரூபாய் இரண்டு கோடியே தொண்ணூற்று ஆறு லட்சத்து எழுபத்தி இரண்டாயிரத்து இருநூற்றி நாற்பத்து நான்கு மட்டும்) தேவைப்படுகின்றது. இச்செலவினம் 2021-2022 ஆம் ஆண்டிற்கு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், இயந்திர பொறியியல் துறை - கணக்கு எண்: 230-20-03-06 – எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் செலவு செய்யப்படும். மேலும். இந்நிறுவனம் இந்திய அரசின் நிறுவனம் ஆதலால், இவை பிணை வைப்புத்தொகை மற்றும் காப்பீட்டு தொகை செலுத்துவதில் இருந்தும், உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**இ.பொ.து.வ.செ. வா.ப.ந.க. எண். பிசி/721/ 2021**

எனவே, மண்டலம் 4 லாரி நிலையத்தில் இயங்கும் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் எரிபொருள் கிடங்கு மூலம் தேவையான எரிபொருள், மேற்கண்ட மத்திய அரசு நிறுவனத்திடமிருந்து அவர்கள் அளித்த விலைப்புள்ளிகளின் படி, அல்லது வாங்கும் காலத்தில் அப்போதைய சந்தை விலைக்கு வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

டீசல் கொள்முதல் செய்ய, 2001-02 ஆம் ஆண்டிற்கு மன்றத்தீர்மான எண்.92 / 2000 நாள். 28.02.2000 அனுமதியின்படி, அரசின் பின் ஏற்பினை பெறுவதற்கு அனுப்பப பட்ட கோப்பின் மீது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் (மா.ந.1) துறை அளித்த அரசு ஆணை நிலை எண்.102 நாள்,07.08.2000, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் ஆகிய மூன்று நிறுவனங்களும் மத்திய அரசின் நிறுவனமாக இருக்கும் வரை, ஒவ்வொரு ஆண்டும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசல் மற்றும் பெட்ரோல் இனி பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ள அனுமதி அளித்து நிரந்திர ஆணை வெளியிடப்பட்டுள்ளது,

அரசு ஆணையினை அமுல்படுத்திட மன்றத்தீர்மான எண். 486/01, நாள்.18.09.2001.-ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், ஒவ்வொரு ஆண்டும் ஆணையரின் ஆணை பெற்று டீசல், பெட்ரோல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திரப் பொறியியல் துறை, வட சென்னை வாகன பணிமனை கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட மண்டலம்- 3 மற்றும் 4 லாரி நிலையத்தை சார்ந்த அனைத்து வாகனங்களுக்கும், புகை பரப்பும், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள், மற்றும் சிறப்பு பிரத்யோக வாகனங்களுக்கு தேவைப்படும் எரி பொருள் (டீசல்) மண்டலம் 4 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க் மூலம் நிரப்பப்பட அனுமதி வேண்டியும்,

2. மண்டலம் 4 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க்கிற்கு தேவையானஎரிபொருள் 2021-2022 ஆம் ஆண்டிற்கு கூடுதல் 324 கிலோலிட்டர் டீசலை கொள்முதல் செய்வதற்கு மொத்த தொகையான ரூ. 2,96,72,244/- (ரூபாய் இரண்டு கோடியே தொண்ணூற்று ஆறு லட்சத்து எழுபத்தி இரண்டாயிரத்து இருநூற்றி நாற்பத்து நான்கு மட்டும்) செலவீனத்தில் அல்லது கொள்முதல் செய்யும் போது அமுலில் உள்ள விலைக்கு திருவாளர்கள். இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து தேவைகேற்ப கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி வேண்டியும்,

3. மண்டலம் 4 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க்கிற்கு தேவையான எரிபொருளை தேவைக்கேற்ப அவ்வப்பொழுது மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்) அவர்களின் ஆணை பெற்று இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்திற்கு RTGS மூலம் முன்பணமாக காசோலை செலுத்தி டீசல் கொள்முதல் செய்ய அனுமதி வேண்டியும்,

4. இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனம் இந்திய அரசு நிறுவனம் என்பதால், அவர்களுக்கு பிணை வைப்பு தொகை கட்டுவதிலிருந்து, பாதுகாப்பு தொகை செலுத்துவதிலிருந்தும் மற்றும் உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கவும்,

5. இந்திய அரசு நிறுவனங்கள் கோரியபடி, தேவையான முன்பணத்தை தேவைக்கேற்ப அவ்வவ்போது RTGS மூலமாக அளிக்கவும்,

6. இதற்கான செலவினத்தை 2021-2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், இயந்திர பொறியியல் துறை – கணக்கு எண்: 230-20-03-06- எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் செலவு செய்யவும்,

7. ஒவ்வொரு ஆண்டும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசலை, இனி சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ளலாம் என அரசு நிரந்தர ஆணை அளித்துள்ளதால், அரசின் பின்னேற்பு இன்றி கொள்முதல்செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்),நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 13.11.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

* * * * * *

**ம.அ.12.பொ.சு.து.ந.க.எண்.எச்2/6502/ 2021**

**தீர்மானஎண்.838/2021** **நாள்:15-11-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி- சுகாதாரத்துறை - மண்டலம்-12 - தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் குழுக்கள் (NULM) மூலம் பணியமர்த்தப்பட்ட மலேரியா பணியாளர்களின் பணிகாலம் 31.10.2021 ல் முடிவடைகிறது - 01.11.2021 முதல் 31.10.2022 வரை ஒரு வருட காலத்திற்கு தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் குழுக்கள் (NULM) கீழ் 177 மலேரியா பணியாளர்களை பணியமர்த்த அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 12, பொது சுகாதாரத்துறை, சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மானம் எண்.866/2020, நாள்: 29.10.2020 ன் படி, மண்டலம்- 12, பகுதிகளில் வீட்டிலுள்ள நீர்த்தேக்க தொட்டிகள், கிணறுகள், மேல்நிலைத்தொட்டிகளில் தேங்கியுள்ள நீரில் கொசுப்புழு வளர்ச்சி ஏற்படாத வண்ணம் கொசுமருந்து தெளிக்கவும், கொசுக்களின் மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்த புகைமருந்து தெளிக்கும் பணி மேற்கொள்ளவும், 177 மலேரியா பணியாளர்கள் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் குழுக்கள் அமைத்து பணியமர்த்த மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. ஏற்கனவே பணிபுரிந்து வந்த தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்க குழுக்கள் (NULM) மலேரியா பணியாளர்களின் பணிகாலம் 31.10.2021 உடன் முடிவடைகிறது. இப்பணிகளை அவசியம் கருதி தொடர்வது அவசியமாகிறது.

| கோட்டம் | குழு எண் | அனுமதிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 156 | NULM–12–156-006 | 21 |
| 157 | NULM–12–157-0013 | 18 |
| 158 | NULM–12–158-001 | 13 |
| 159 | NULM–12–159-011 | 5 |
| 160 | NULM–12–160- 002 | 13 |
| 161 | NULM–12 – 161 -003 | 14 |
| 162 | NULM–12–162 -004 | 16 |
| 163 | NULM–12 – 163 -006 | 15 |
| 164 | NULM–12–164-0013 | 16 |
| 165 | NULM–12 – 165 -015 | 15 |
| 166 | NULM–12– 166 -0016 | 15 |
| 167 | NULM–12–167 -017 | 16 |
| மொத்தம் | | 177 |

சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண் 866/2020, நாள்: 29.10.2020ன் படி, தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் மண்டலம் - 12 ல் 177 பணியாளர்களை ஈடுபடுத்தி பணி மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டதன் படி மேலே குறிப்பிட்டுள்ள தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்க குழுக்களின் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டது.

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 14.07.2021 நாளிட்ட செயல்முறை ஆணையின் படி, பொது சுகாதாரத்துறையில் பணிபுரியும் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மலேரியா பணியாளர்களுக்கு 2021-2022 ஆம் ஆண்டிற்கான தினக்கூலி ரூ. 410/- ஆக உயர்த்தி வழங்க குறிப்பிட்டதை தொடர்ந்து. மேற்கண்ட பணிக்குரிய தோராயமான செலவின விபரப் பட்டியல்

| | | |
|---|---|---|
| 1. | மொத்த கோட்டங்கள் | 12 |
| 2. | தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை | 177 |
| 3. | ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு தேவைப்படும் தினக்கூலி | ரூ. 410.00 (*Rupees four hundred and ten only*) |
| 4. | ஒரு நாளைக்கு 177 நபர்களுக்கு தேவைப்படும் தினக்கூலி | ரூ. 410 X 177 = ரூ. 72,570.00 (*Rupees Seventy two thousand five hundred and seventy only*) |

**ம.அ.12.பொ.சு.து.ந.க.எண்.எச்2/6502/ 2021**

| | | |
|---|---|---|
| 5. | நீட்டிப்பு காலமான 01.11.2021 முதல் 31.10.2022 வரை 177 நபர்களுக்கு தேவைப்படும் தினக்கூலி | ரூ.410 X 177 X 365 = ரூ 2,64,88,050 (*Rupees two crore sixty four lakh eighty eight thousand and fifty only*) |
| 6. | பயன்படுத்தப்படும் கணக்கு குறியீடு | 30-32-02 (ANTI MOSQUITO OPERATION) /210-10-06-02 (PAYMENT TO CASUAL STAFF-HEALTH WORKS) |

எனவே,

1. மண்டலம் - 12ல் 01.11.2021 முதல் 31.10.2022 வரை கொசு ஒழிப்பு பணி, கொசு மூலம் பரவும் நோய்களான மலேரியா, டெங்கு மற்றும் சிக்கன்குனியா முதலான நோய்களை தடுக்கும் பணி மேற்கொள்ள 177 பணியாளர்களை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்க குழுக்களின் மூலம் ஈடுபடுத்தி பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதியும்,
2. இந்த பணியாளர்களுக்கு 01.11.2021 முதல் 31.10.2022 வரை தேவையான செலவீனத் தொகை ரூ.410 X 177 X 365 = ரூ 2,64,88,050 (*Rupees two crore sixty four lakh eighty eight thousand and fifty only*))யை கணக்கு தலைப்பு எண். 30-32-02 (ANTI MOSQUITO OPERATION) /210-10-06-02 (PAYMENT TO CASUAL STAFF-HEALTH WORKS)ன் கீழ் செலவினம் செய்யவும்
3. மத்திய அரசின் திட்டமான தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் உள்ள குழு உறுப்பினர்களாக இருப்பதால் வருமான வரி பிடித்தம் செய்வதிலிருந்தும் மற்றும் ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கவும்,
4. மன்றத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின்படி '177' மலேரியா பணியாளர்கள் கொசு ஒழிப்பு பணியில் ஈடுபடுத்தவும்,
5. கொசு ஒழிப்பு பணிக்கான குழு உறுப்பினர்களின் ஊதியத்தை 365 நாட்களுக்கு சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி ரூ. 410/-ஐ வழங்குவற்கு நிர்வாக அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்புஅதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய குறிப்பில்,

**Principal Secretary/Commissioner's remarks dated.03.11.2021 as follows:**

**"3 months renewal only (Nov-Jan)"**

முதன்மைச்செயலர்/ஆணையரது 03.11.2021 நாளிட்டகுறிப்புபடிக்கப்பட்டது.

**"3மாத காலத்திற்கு ஜனவரி-2022 வரை பணியமர்த்த, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

* * * * * *